# திராவிடநாடு

28—12—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## சிந்தனை செய்திடுவீர்!

(ஆ. ஆரிது)


★

சிந்தை செய்திடு வீர் — திராவிடத்
திருநாட் டிடையுறை வீர்..........
நந்தமிழ் மலர்ந்த மொழிபிற நான்கும்
நமதென அறிந்திடு வீர்....... (இதைச்)

காவியம் நிறைந்தது வோ—மொழிதான்
கண்டினிற் கலந்தது வோ
பாவிய ரகன்ற நன்னா டிதுவோ
பண்பேறி மூத்தது வோ....... (இதைச்)

ஆழியால் நல்லரண் படைத்தவளோ-பல்
ஆற்றினை அமுதா யுடையவளோ
தோழமை யாலிந்த உலகம் யாவிற்கும்
தூதனைத் தந்த தாயவளோ....... (இதைச்)

பண்டைய நாளில் வளர்ந்தவள்தான்—இன்று
பயந்தடி மைபோல் வளைந்துவிட்டாள்
அண்டையி லுள்ளான் தீயாக நம்மை
ஆண்டிட நாயிங் கொடுங்குவதோ (இதைச்)



# சீச்சீ! இந்தப்பழம் புளிக்கும்

காலை ஒளியிலும், மாலை வெய்யிலிலும், மனங்கவர் தோட்டத்துப் பூக்களிலும், மழலைப் பேச்சிலும், மனைவியின் இதழோரச்சிரிப்பிலும் நர்த்தனமாடும் அழகினைக் கண்டு, அடடாவென மெய்சிலிர்ப்போருண்டு! வானமே, உன் வண்ணம் கண்டேன், மெய்மறந்தேன் என வர்ணிக்கும் கவிஞனின் காவிய அழகு, களைப்பையெல்லாம் போக்கிவிடுகிறது! இயற்கையின் அழகினை வண்ணத்தால் காட்டிடும் ஓவியனின் திறமையினைக் கண்டால், உள்ளத்தையே இழந்துவிடுகிறோம்! உலகத்தையே வாள் வலிமையால் அதிரச்செய்த ரோமாபுரி வீரன் ஜூலியஸ் சீசர் முதல், பிரஞ்சுநாட்டுச்சர்வாதிகாரி நெபோலியன் வரையில், அழகுக்கு ஆர்த்தியெடுத்தவர்கள் என்பதைச்சரிதம்சொல்லும். சுருள் கத்தி சுழற்றும் சுப்பன்கூட, அழகுக்கு அடிவருடாமல் போகமாட்டான்! நல்லபாம்புகூட, இசையின் அழகினைக் கேட்டு, மயங்கிவிடுகிறது! கோபத்தை மாற்றிவிடும் அழகு. புத்துயிரை உண்டாக்கும் நல்லழகு. முத்தும், முல்லையும், கத்தும் கடலும், பரந்த வானமும், சிந்து பாடும் சிற்றாறும், சிலிர்க்கும் மரக்காவும், பறக்கும் புறாவும், எழுத்தாளனைப் பைத்தியமாக்கியதுண்டு. சோகமும் சோர்வும் நிரம்பியபோது, இயற்கைக் காட்சிகளை ஒருமுறை கண்டால், இரண்டும் ஓடி இதயம் களிப்புறும் என்கின்றனர் உளநூல்காரர்கள். உலகமே உருள்கிறது என்று சொன்னால், ஓரளவுக்கு அழகின் வசப்படுவதே காரணமெனலாம். அழகை வெறுத்தவன் எவனுமில்லை! அண்டமாமுனிவர் எல்லாம், அழகுக்கு அடிபணிந்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றன! தமிழறிஞர் தி. வி. க. முருகனைப்பற்றி விளக்கம் தரும்போது, "முருகு, என்றால் அழகு. அழகுக்குத் தெய்வம் முருகன். அழகைத் தெய்வமாக வழிபடும் உள்ளம் கொண்டவர்கள் தமிழர்கள்" என்கிறார். அழகு எந்த இடத்திலிருந்தாலும், எந்த உருவிலிருந்தாலும் மனிதன் பாராட்டத்தவறுவதில்லை. பக்கத்து வீட்டிலே பூத்த ரோஜா என்பதற்காக, அது அழகில்லை, என்று எவனும் கூறான். ஷேக்ஸ்பியர், ஆங்கிலேயர் என்பதற்காக அவரது கவிதையில் கூறும் அழகினை, இரசிக்காமற் விட்டுவிடமுடியாது. கலை, காவியம், இலக்கியம் இவைகளில் காணப்படும் அழகு, அலைகடல்களைத் தாண்டிச் சென்று புகழ்பெறும்; பொறாமைக்காரனைத் தவிர, யாவரும் அதனை ஏற்பர்; மகிழ்வர். ஆனால், அழகை, அமைச்சர் சுப்பிரமணியம் வெறுக்கிறார் — சபிக்கிறார் — கண்டிக்கிறார்! ஆம், நமது மாநிலக் கல்வியமைச்சர் 'கனம்' சுப்பிரமணியனார்தான், அழகைப் பழிப்பவர்- நீண்ட நாளாக 'அழகை' வெறுக்கிறார் எனினும், இந்தக் கிழமை, சென்னையிலே ஓரிடத்தில் பேசுகிற போது, "இப்போது சிலர்; பேசுவது என்றால், அழகாகப் பேசவேண்டும் என்று அடுக்குச் சொல்லலங்காரத்தோடு பேசுகிறார்கள். விஷயம் இல்லாதவர்கள், கருத்துத் தெளிவு இல்லாதவர்கள்தான் அடுக்குமொழிப்பேச்சில் ஈடுபடவேண்டியிருக்கிறது", என்று கூறியிருக்கிறார்.

விஷயம் இல்லாதவர்கள், கருத்துத் தெளிவு இல்லாதவர்கள்தான் அழகுப் பேச்சில் ஈடுபடவேண்டியிருக்கிறதாம்! அமைச்சர், தெளிவு உள்ளவர்—விஷயம் இருப்பவர்—எங்கே அவர் கொஞ்சம் அழகுப் பேச்சைப் பேசிக் காட்டட்டுமே என்று கேட்கத் தோன்றும்!! கேட்டால் என்னிடம் 'விஷயம்' இருக்கிறது — எனவே, அழகுப் பேச்சுத் தேவையில்லை, என்று பதிலளிக்க முயலுவரர். 'விஷயம்' இருப்பதாலேயே எதையும், எவனும் விரும்பிவிடுவதில்லை. சோறு சமைப்பாள் மனைவி — மிகமிக உதவிகரமாயிருப்பாள்—ஆனால், எப்போதும் முகத்தில் கரியைப்பூசிக்கொண்டும், வாரத்துக்கு ஒருதடவை உடலைக் கழுவிக்கொண்டும்தானிருப்பாள் என்றால், கட்டியவன் நிச்சயம் 'விவாகரத்து' செய்யத்தான் தவிப்பான். ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்களே—அமைச்சர்கள் கூற்றுப்போல, அது 'தெளிவு நிரம்பியது' எனவே கொள்வோம் — ஆனால், அது பற்றி மக்களுக்குச் சொல்ல, ஏன், அழகு அழகான சுவரொட்டிகளும் விளம்பரங்களும் செய்கிறார்கள்? 'விஷயம் இருக்கிறது' என்று விட்டுவிடுவதுதானே! அழகாக, அடுக்குச் சொல்லலங்காரத்துடன், திராவிட முன்னேற்றக் கழகத்தார் பேசுவதை மட்டுமல்ல; மாநாடுகளுக்கும் கூட்டங்களுக்கும் அச்சடித்து ஒட்டும் சுவரொட்டிகளைக்கூட அமைச்சர், கேலிசெய்ததுண்டு. ஆனால், அவரை வரவேற்புக்கழகத் தலைவராகக்கொண்டு நடந்த கோபி காங்கிரஸ் மாநாட்டுக்கு, எத்தனை கலரில் 'போஸ்டர்' போட்டார்கள்? ஏன், வெறும் சுவரொட்டிகளைத் தயாரித்திருக்கக்கூடாது!!

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ பரிவு ★

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [28 12 58] தனிப் பிரதி 13-காசு [இதழ் 24


அண்ணன், தம்பி, தோழன், நெருங்கிய தொடர்புடையவன் — என்கிற பாசமும் பரிவும், அரசுக் கட்டிலிலிருப்போருக்கு, இருத்தலாகாது என்பர். தராசினைப்போல, இருந்திடவேண்டியவர்களை, இவை சாய்த்துவிடும் என்பதாலேயே, உறவு முறைகளுக்கும் உத்தியோகத்துக்கும் தொடர்பு இருக்கக்கூடாது என்று சொல்லுவர்.

கொஞ்சலாம், குலவலாம், அசதியாடலாம், அரட்டையடிக்கலாம். இவை அனைத்தையும், பொறுப்புள்ளோர், இடமும் காலமுமறிந்து செய்ய வேண்டும். இல்லையெனில், அரசுக்கட்டிலில் அங்கம் வகிப்போர், ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காக நேரும். நல்லோரைப்பற்றிப் பேசும்போதுகூட, நாவடக்கமும் வார்த்தைகளை வீசுவதில் எச்சரிக்கையும் வேண்டும் என்பர். இதனாலேயே, வெள்ளையர்கள் காலத்தில், எதனையும் முன்கூட்டியே எழுதிப்படிக்கும் பழக்கமிருந்தது. இந்த நாவடக்கம், நமது சுதந்திர அரசில் இல்லையென்பதை நீண்ட நாட்களாகக் கண்டு வருகிறோம்! வேண்டியவர்கள் என்றால், இடம் காலம் பற்றிக்கூடக் கவலைப்படாது புகழ்வதும், வேண்டாதவர்கள் என்றால் நாக்கில் நரம்பின்றி, அவர்களைப் பற்றிச் சரியான எடைபோடாது, 'நான்சென்ஸ்—முட்டாள்தனம்—காட்டுமிராண்டிகள்', என்று ஏசுவதும், காங்கிரஸ் தலைவர்களின் முறையாக இருந்து வருகிறது!!

சர்க்காரின் பணத்தை விரயம் செய்தது, விசயலட்சுமி பண்டிட்டாகவோ, வி. கே. கே. மேனனாகவோ இருந்தால், அதைப்பற்றிப் பேச்சு மூச்சுக் கிளம்புவதில்லை. எவராவது கேட்டிடினும், ஏதாவது பதில் சொல்வதோடு, அவர்களது புகழைப் பற்றியே அதிகம் பேசுவர். அதே தவறை, ஒரு கிராம முன்சீபு செய்துவிடட்டும்—சட்டம் கொட்டும்! தண்டனை கிட்டும்!!

வேண்டியவர்களை வெளிநாடுகளில் நியமிக்கிறார்கள்—நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சலுகை தருகிறார்கள்—கருணைகடாட்சம் பெற்றவர்களுக்கு உத்தியோக உயர்வுகள் தாராளமாகக் கிடைக்கிறது—தேர்தலில் தோற்றவர்களாயினும், தோழர்கள் என்றால் கவர்னராகவாவது, ஏதாவதொரு கமிஷன் தலைவராகவாவது ஆக்கிவிடுகிறார்கள் — என்ற குற்றச்சாட்டுகள், சுதந்திரம் பெற்ற நாள் முதல், காங்கிரஸ் சர்க்கார்மீது வீசப்பட்டுவருகின்றன.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நிதியமைச்சராயிருந்தவர். அந்தப் பொறுப்பினைவிட்டு, அவர் விலகும்படியான நெருக்கடி எப்படி ஏற்பட்டதென்பதை நாடு அறியும். ஒருசில கோடிக்கணக்கான ரூபாய்கள், விரயமாயிற்று. அதன் காரணமாக, நிதியமைச்சர் பொறுப்பையே, அவர் இழக்கநேர்ந்தது. இன்னும், அரசியல் அரங்கில், சரியாக உலவ முடியாதபடி இருக்கிறார் அவர்! அவருடைய படத்தை, டில்லி உள்நாட்டமைச்சர் பந்த், இந்தக் கிழமை சென்னைவந்து திறந்து வைத்திருக்கிறார். படத்தைத் திறக்கட்டும், அவர் பலவிதமாக ஆற்றிய தொண்டுகளைக் குறிப்பிடட்டும், காங்கிரசுக்குச் செய்த சேவையை விளக்கட்டும்—யாருக்கும் கவலையில்லை. ஆனால், அவரைப்பற்றியும் அவர் விலகக் காரணமாயிருந்த முந்திரா தகராறு குறித்தும் ஓரிரு சொற்கள் உதிர்த்திருக்கிறார், பந்த். "நேரடியாக டி. டி. கேக்கு தொடர்பு, உண்டோ இல்லையோ......" என்கிற வாசகம்தான் அது. இப்படி, அந்தச்சம்பவம் பற்றிய விசாரணை இன்னும் முடிவடையாத கட்டத்திலிருக்கும்போது, பொறுப்புள்ள டில்லி உள் நாட்டமைச்சர் இப்படிப் பேசலாமா என்று பார்லிமெண்டில் பலர் கேட்டிருக்கிறார்கள். டி. டி. கேயைப் பாராட்டவந்து, மீண்டும் அவர் தலை உருளும்படியான சூழ்நிலையை உருவாக்கிவிட்டார், பந்த்! உண்மையிலேயே, படத்திறப்பு விழாவுக்கு அவரை அழைத்தவர்களும், பேசிய அவரும் நமது அனுதாபத்துக்குரியவர்கள்!!

விழாவில், டி. டி. கேயின் புகழைப் பாடியது மட்டுமல்ல, விமானம் ஏறும்போதும் காமராஜரிடம், டி. டி. கேயைச் சுட்டிக்காட்டி, "இவர்மீது ஒரு கண் வைத்திருங்கள்!" என்றாராம், பந்த். அதாவது

காமராஜரே இவரைக்கைவிட்டுவிடாதீர், எனும்பொருளில் சொன்னாராம், பந்த். சிரித்துக்கொண்டாராம், டி. டி. கே! தலையாட்டினாராம் காமராஜ்!! பந்த், கூறியதற்கு என்ன பொருள்? டி. டி. கேக்கு உரிய இடம் கொடுங்கள், என்பதுதானே! கட்சிவிவகாரம் எனின் நமக்குக் கவலையில்லை. பந்தும், காமராசரும் ஆட்சியிலிருப்பவர்கள். அவர்கள், இப்படியெல்லாம், பேசுவதும், புகழ் பாடுவதும் சரியா? வேண்டியவர்கள் என்றால் தேளும் தேனாகத் தோன்றும் என்பதைத் தானே காட்டுகிறது. அதிலும், ஆச்சாரியாரைப் போல அல்ல டி. டி. கே! இன்னும், குற்றவாளிக் கூண்டிலேயே நிற்பவர்!!

பழம் பெரும் அரசியல்வாதிகளில் ஒருவர், என்கிறார்கள் பந்தை. அவரே இப்படியென்றால், ஒவ்வொரு மாநிலத்திலும், ஆட்சிக்கு வந்தோர் வேண்டியவர்களிடம் பரிவும் பாசமும் காட்டப்படுவதாக அடிக்கடி வரும் புகார்களை, நம்பத்தானே செய்வார்கள் மக்கள்!!

★

# தஞ்சையில்....!

தஞ்சையிலிருந்து, மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செல்லும், எஸ். எம். டி. பஸ் தொழிலாளர் தம் போராட்டம் பற்றிய செய்திகளை நாட்டவர் அறிவர்.

300க்கு மேற்பட்டோர், சிறைவாசமும் தண்டனையும் பெற்றிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகமும் ஏனைய கட்சியினரும் ஒருங்கு நின்று போராடும், இந்தக் கிளர்ச்சியினை, மென்மேலும் தூண்டிவிடும் போக்கிலேயே பஸ் நிர்வாகிகள் நடப்பதும், அதற்கு எண்ணெய் ஊற்றும் போக்கில் அரசாங்கம் நடந்துகொள்வதும் விந்தையாகவே உள்ளது.

தனிப்பட்டவர்களின் காரியம் என்பதோ, வேண்டியவர்களின் விஷயம் என்பதோ, திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கிடையாது. சமநீதியும், அன்பு நோக்குமே நாம் விரும்பும் பாதைகளாகும். நிர்வாகிகளின் பிடிவாதம், இன்றுவரை, தளர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள், வெளிநாட்டிலிருந்துவிடுவதில்லை! நாளைக்குத் தஞ்சையிலேயே, இதே தொழிலாளர்களுக்கு மத்தியில், உறவு கொண்டு வாழப்போகிறவர்கள்தான்!! ஏனோ, இன்று வீம்புகாட்டுகின்றனர். ஏழை பாட்டாளியின் குரலுக்கு மதிப்பளிக்கும் கண்ணியமும், உதார குணமும் நீடித்து நிற்பவையாகும். பிடிவாதம் விடுத்து, தொழிலாளர்களுக்கான 'நீதி'யினை வழங்கும் வகையில், நிர்வாகிகள் முன்வருவார்களென எதிர்பார்க்கிறோம். தீ பரவுவது!—இருதரப்புக்கும் நல்லதல்ல.

★

---

### 2-ம் பக்கத் தொடர்ச்சி

அமைச்சர், அழகுப்பேச்சையும் அடுக்குச் சொல்லையும் கிண்டல் செய்கிறார். கருத்துத் தெளிவும், விஷயம் இல்லாதவர்களும்தான் அப்படிப் பேசுவார்கள் என்கிறார்; இதற்கான பதிலை, எத்தனையோ, தடவை சொல்லிவிட்டோம் — எவ்வளவுதான் அடுக்கியடுக்கி, பொருளின்றிப்பேசினாலும் 'போடா பைத்யக்காரா!' என்று சொல்லி விடுவார்கள், தமிழ்மக்கள்! அமைச்சர் நினைக்கிற அளவுக்கு, தமிழை அறிந்துகொண்டுசுவைப்பதில், தமிழகம் தாழ்ந்துவிடவில்லை!! எனினும், தாவித்தாவி, தனக்குக் கிட்டவில்லையென்றதும் ''சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்'' என்றதாமே நரி, அதுபோல, தங்களால் அழகாக, அடுக்குச் சொல் கலந்து பேச முடியவில்லையென்றதும், பழிக்கிறார்! பழியும் போடுகிறார்!!

அமைச்சர்களுக்கு மட்டுமல்ல, அவர்களது கூடாரமாம் காங்கிரசில்கூட, அழகாகப் பேசும் அருகதை பெற்றோர் இல்லை என்பதை, நாம் அல்ல, இன்னொரு அமைச்சரே சொல்கிறார்.

அன்பர் சுப்பிரமணியம், அழகாக அடுக்குச் சொல்லில் பேசுவதா, அது தெளிவில்லாதவர் செயலன்றோ என்கிறார், சென்னையில் நடைபெற்ற ஒரு பேச்சுப் போட்டியில் பேசுகிறபோது! இன்னொரு அமைச்சர், இதே கிழமை, மதுரைக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் பேசுகிறபொழுது, காங்கிரஸ்காரர்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார், 'காங்கிரஸ்காரர்கள், மக்களைக் கவரும் வகையில், மேடையில் அழகாகப் பேசப் பழக வேண்டும்'' என்று.

அழகாகப்பேச, காங்கிரசாரைப் பழகிக்கொள்ளச் சொல்லுகிறார் இராமையா! அப்போதுதான், மக்களைக் கவரமுடியுமாம்!! ஆனால், சுப்பரமணியம் கூறுகிறார், அழகாக எதற்குப் பேசுவது, 'விஷயம்' இல்லாதவர்கள்தான், வீண் வார்த்தை அலங்காரம் செய்ய வேண்டுமென்று!!

கட்டிடம்தானே கட்டவேண்டுமென்பதற்காக, எந்த என்சினீயராவது, கன்னாபின்னாவென்று கட்டினால் விட்டுவிடாது அரசாங்கம். சென்னை போன்ற நகரங்களை எப்படி அழகுசெய்வது என்பது பற்றி, அடிக்கடி, ஆலோசனை நடத்தப்படுகிறது. அறிந்தவர்களுக்கு அழகுதேவையில்லையென்று, அமைச்சர்கள் இருந்துவிடுவதில்லை. எந்தக் கோயில்களுக்குப் போனாலும், அங்கேயுள்ள ஆண்டவனைப்பற்றிப் பேசுவதைவிட, அங்குள்ள கலையழகைத்தான் அதிகம் எடுத்துரைக்கிறார்கள். டில்லி சர்க்கார், அழகாக யார் சுவரொட்டிகள் தயாரிக்கிறார்கள். என்று தேர்ந்தெடுத்துப் பரிசு தரவும் இருக்கிறார்கள் என்று சேதி சொல்கிறது! சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில்

(13-ம் பக்கம் பார்க்க)

# அதிசயம் கண்டார்!

—பழநி—

சில இரசாயனப் பொருள்களைத் தரையில் வைத்துக் கொளுத்தினார்கள்-புகை வானமண்டலத்தை வட்டமிட்டது. அன்று முழுதும் நகரமெங்கும் பனிப்புயல் வீசியது — செயற்கை மூலம் பனியையும் புயலையும் உண்டாக்க முடியும் என்று சீன நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டார்கள். இதனைப் பெருமிதமாக அறிவிக்கிறது சீனச்சேதி! 180 அடி நீளமுள்ளது--காங்கிரீட்டால் கட்டப்பட்டது—பூமிக்குள் ஓடும் இரயில் நிலையத்துக்குள் போகும் மக்கள் வசதிக்காகச் செய்யப்பட்டது — நெருக்கமாக மக்கள் நடந்துசெல்லக் கஷ்டப்படுகிறார்கள் — கட்டப்பட்டுள்ள இந்த நடைபாதையில் நடந்துகூடச் செல்லவேண்டாம்—ஏறி நின்றால் போதும், மேலேயிருந்து பூமிக்குள் கொண்டுபோய் விட்டுவிடும்—இதன் பெயர் நடக்கும் பாதை—அரிய சாதனையான இதனை இலண்டனில் அமைத்து விட்டார்கள் என்கிறது, இங்கிலாந்துச் சேதி! எத்தனை தடவையானாலும் சரி, தோல்விகள் தொடர்ந்து உண்டானாலும் சரி, எப்படியும் நாங்களும் 'குட்டிச் சந்திரனை' அனுப்பியே தீருவோம்; அதற்குள் இத்தடவை ஒரு குரங்கைவைத்து அனுப்பப்போகிறோம் என்கிறது அமெரிக்கச் சேதி! இதெல்லாம் ஒரு அதிசயமா — இதோ நான் தருகிறேன் ஒருசேதி- பாரீர் மக்களே என்று, சென்னை 'மெயில்' ஏடு, வெளியிட்டிருக்கிறது ஒரு புதுமை!!

செயற்கைப் பனி — நடக்கும் நடைபாதை—பறக்கும் சந்திரன், இவைகளைவிட, 'மெயில்' என்ன அதிசயமான சேதியைத் தர முடியும்? அவர்களையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு 'அதிசயங்களை' கண்டுபிடிக்கக்கூடியவருமா இருக்கின்றனர் தமிழகத்தில்? என்று ஆச்சரியப்படக்கூடும். ஆமாம், தோழர்களே அவையெல்லாம் பெரிய அதிசயமா என்ன! வெறும் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் சாதனைகள்!! அவைகளையெல்லாம் தோற்கடிக்கக்கூடிய அற்புதம்—இதுவரை உலகமே கண்டிராத அதிசயம்—கேட்டால் திகைத்து மூச்சே நின்றுவிடக்கூடிய ஆச்சரிய நிகழ்ச்சி சென்னை விமான நிலையத்தில் நடந்திருக்கிறது — காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார் இந்தக் கிழமை, ஆகாய விமானம ஒன்றைப் பார்த்துவிட்டார்!!!

இதுவரையில், ஒரு விமானம் எப்படிப் பறக்கிறதென்பதையும், விமான நிலையம் எப்படியிருக்குமென்பதையும் அவர் கண்டதில்லையாம். இந்தக்கிழமை, பார்ப்பதற்கென்றே, விமான நிலயத்துக்குப் போய், இவைகளைக் கண்டாராம். இதைப் பிரமாதப்படுத்தி, அதிசயத்திலும் அதிசயமாகப் போட்டிருக்கிறது, 'மெயில்' ஏடு.

சினிமா பார்க்காதே—நாகரிகங்களை விரும்பாதே —சந்தியாவந்தனத்தை மறக்காதே — பழைய முறைகளைத் துறக்காதே—வெளிநாட்டார் அஞ்ஞானிகள்—மெய்ஞ்ஞானிகள் நாம், என்று இப்படி, பிரசங்கமாரி செய்துவருகிறவர் சங்கராச்சாரியார்.

ஏதோ நாகரிகம் என்கிற பெயரால் உலகம் கெட்டுவிட்டது என்றும், அதனாலேயே மக்கள் சட்டை கோட்டுகளைப் போட்டுக்கொண்டு திரிகிறார்களென்றும், தன்னைத் 'தரிசிக்க' வந்தால் நாகரிக கோலத்துடன் எவரும் வரக்கூடாதென்பதற்காக ஆண்கள் சட்டையில்லாமலே (பெண்களுக்கு, இன்னும் இந்தவிதியைச் சங்கரர் அமுலாக்கவில்லை!) தன்னெதிரில் வர வேண்டுமென்றும், சொல்லுகிறவர் சங்கராச்சாரியார்.

மணிக்கு அறுபது எழுபது மைல் வேகத்தில் போகக்கூடிய கார்களிருந்தும், அவை நாகரிகத்தின் சின்னங்கள் என்பதால், இன்னும் பல்லக்கிலேயே ஏழெட்டு மனிதர்கள் சுமக்க, காஞ்சியா — குடந்தையா—சென்னையா — தாம்பரமா என்று சுற்றிக்கொண்டு வருகிறவர் சங்கராச்சாரியார்.

அவருக்கு ஆசை வருகிறது' சிறுபிள்ளையைப் போல, விமானம் பறப்பதைப் பார்க்க! இச்சா சக்திகளையெல்லாம் துறந்தவர், பற்றற்றவர், பாச உணர்ச்சிகளைத் துண்டித்துக் கொண்டவர்—அவர் மனதில், 'ஆசை' எழலாமா! எழுந்தாலும், அடக்கிக்கொள்வதன்றோ, ஞானியர் பண்பு?—என்பது ஒரு புறமிருக்க, விஞ்ஞானத்தின வலிவு எவரெவர் மனதையும் வளைத்துவிடும் என்பதையே உணர்த்த விரும்புகிறோம் நாம்.

சங்கராச்சாரியார் போன்ற மதவாதிகள், புதுமைக்கு எப்போதும் வரவேற்புக் கூறியவர்களல்ல! பூமி உருண்டை என்றவனையும், மேல் உலகம் இல்லை என்றவனையும், நட்சத்திரங்களும் பூமியைப் போன்றவைதான் என்றவனையும், அந்தந்த நாட்டு மதவாதிகள் என்னென்ன பாடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை அறிவோம் நாம்,

அதுபோல, விஞ்ஞான சாதனைகள், இங்கே முளைக்கவில்லை! எனினும் கால ஓட்டத்தை எண்ணி, சமுகத்தில் கருத்துப் புரட்சியினை உண்டுபண்ணுவோர் உண்டு!! அவர்களுக்கு, சங்கராச்சாரியாரின் கும்பல், சாபத்தையே அளித்து வருகிறது. வர்ணாசிரம தர்மம் இருக்கவேண்டும் — நாலு சாதி முறை இருத்தல் வேண்டும்—முதல் சாதியாகப் பார்ப்பனரே விளங்கவேண்டும்-மூல மொழியாக வடமொழியே கொண்டாடப்பட வேண்டும்—பள்ளரும் பறையரும் இருக்கவேண்டும்—கலப்புத் திருமணம் தகாது, ஆகாது இப்படியெல்லாம் சொல்லுபவர், சங்கராச்சாரியார்.

இதெல்லாம், வேதத்துக்கு விரோதம்! நாகரிகம் என்பதும், விஞ்ஞானம் என்பதும், பழைமையை மீறும் செயல்! பழைமையை மீறுவது பாதகமானது!!- இதுதான், அவரது கோட்பாடாகும்.

அப்படிப்பட்டவர், இன்னும் இரயிலேறாதவர், விமானத்தைப் பார்க்க மீனம்பாக்கம் போகிறார்! விமானம் கிளம்பும் வேடிக்கையை, கூடத்தில் நின்றபடி பார்த்தபிறகு தான், திரும்பினாராம் — "அந்த விமானத்தில் இன்னின்ன சாதி தான் ஏறிப்போகலாம், என்று விதி இருக்கோன்னோ?" என்று கேட்டாரா என்பது தெரியவில்லை! மெயிலார், அவர், விமானத்தைப் பார்த்த அதிசயத்தை மட்டுமே நமக்குத் தந்திருக்கிறார்!!

விமானம் பறக்கப் பறக்க, அவர் மனமும் நிச்சயம் பறந்திருக்கும். ஏனெனில், இப்போதுதான், முதன் முதலில் அந்த விநோதத்தைப் பார்த்திருக்கிறார்! உபநிஷத்—வேதம்—ஆகமம் — புராணம்—அஷ்டதிக்குப் பாலகர்கள் —மூல தெய்வம் — விக்னேஸ்வரர் —சரஸ்வதி இலட்சுமி—முப்பத்து முக்கோடி தேவர்கள், எல்லாமிருந்தும், இது எதுவுமில்லாத நாட்டான் கண்டுபிடித்தது விமானம். அது மட்டுமா, இங்கே சங்கரர் உண்டு, மாத்துவர்உண்டு, இராமானுஜர் உண்டு, இவர்கள் ஒவ்வொருக்குமென மடாலயங்கள் உண்டு. அங்கே 'மின்சார வெளிச்சம்' உண்டு! அந்த மின்சாரத்தைக் கண்டுபிடித்தவன்; எவன்? சாதி பேசாதவன், சனாதனம் தெரியாதவன், சம்பிரதாயம்பேசாதவன் — அந்நியன்! வெளிநாட்டான்!!

அணுவளவும் ஆச்சார நியம நிஷ்டைகள் குறையாதவர்--ஆண்டவன் நாமத்தை இலட்சத்துக்கு மேல், வெள்ளையன் கண்டுபிடித்த பேப்பரில், வெளிநாட்டான கண்டுபிடித்த பேனாவைக்கொண்டு, எழுதிக் கொடுத்தால் முத்திரைக் காசுகள் கொடுப்பவர் — அந்தளவுக்கு ஆண்டவன் பால் பக்தியும் பாசமும் கொண்டவர்—இவர் கனவில் தோன்றியாவது, ஆண்டவன் ஆகாய விமானம்கூட வேண்டாம் 'சைகிள்' செய்யக் கற்றுக்கொடுத்ததுண்டா! ஆதிகாலம் முதல், இவர்களுக்குத்தெரிந்திருப்பதெல்லாம் எப்படி நாமம் போடுவதென்பதும், எங்ஙனம் திருநீற்றினைச் சாற்றிக்கொள்வது என்பதும் தவிர வேறென்ன? அதற்குக்கூட ஆயிரம்சண்டைகள்! தத்துவார்த்தங்கள்! விளக்கங்கள்!

ஆகாயவிமானத்தை மட்டுமல்ல — அதே தாம்பரத்துக் கருகில் அமைந்திருக்கும் "இயந்திரத் தொழில் கல்லூரி"க்கும் போனாராம் சங்கரர். எப்படியெப்படி, நவீன சாதனங்களை இயக்குவதில், மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்பதையும் பார்த்தாராம். பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்ததுபோல, என்று சொல்வார்களே, அதுபோலத் தான இவையெல்லாவற்றையும் பார்த்திருப்பார் சங்கராச்சாரியார்! இது அவர் குற்றமல்ல—இத்தனை நாளும், இவையெல்லாம் சமுக விரோதக் கண்டுபிடிப்புகள், உலகம் கெட்டுப்போவதற்கு அடையாளங்கள் என்றே கருதி வந்தவர் அவர்!! அதனால், ஆச்சரியமும், வியப்புமே அடைந்திருப்பார்!!

இத்தனை நாளும், பரப்பிரம்ம பூசையே வாழ்வின் இலட்சியம் என்றிருந்த இவர், இப்போது விஞ்ஞான ஒளியின் அற்புதத்தையெல்லாம் கண்டு மகிழும் ஆர்வம் பெற்றுப், போய்ப்பார்த்திருக்கிறார். இனிமேலாவது, தன் பாதையையும், போக்கையும் மாற்றிக்கொண்டு, வளரும் உலகின் புதுமைகளுக்கு வாழ்த்து அளிக்கக் கூடியவராக மாறுவாரா, என்று பேதை மனம் எண்ணச் சொல்கிறது.

அப்படி வந்தால், பிறகு மடம் இருக்குமா! அக்கார வடிசலும், ஆதிக்கப் போகமும் நிலைக்குமா!!- அவரை விமானத்திலும், தொழிற் கலைக்கூடத்திலும், அழைத்துச் சென்று காண்பித்தவர்களில் எத்தனை பேர், வாராவாரம் அவரது காலடிகளில் போய்விழுந்து வருகிறவர்களோ, யார் கண்டோம்? உலகத்துக்கே நீதி போதிப்பதும், நிமிடத்துக்குப் பல இதழ்களை அடித்துத்தள்ளும் அச்சியந்திரம் பெற்றிருப்பதுமான 'இந்து'வின் அதிபதி போன்றோர், இன்னும், சங்கராச்சாரியாரைத் தரிசிப்பதே பாக்கியம் என்று கருதுகிறவர்கள் தானே!!

இந்த நாட்டிலுள்ள ஒரு அற்புதமே இதுதானே.

சங்கராச்சாரியார், விமானம் பறப்பதைப் பார்க்க ஆவலுடன் போகிறார்!

விமானம் ஏறி, ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் வாராவாரம் செல்லும் அறிஞர்களில் எத்தனை பேர், சங்கராச்சாரியாரைப் பார்த்துத் தரிசிக்க, ஆவலுடன் போகிறார்கள்!!

---

எஃகு உற்பத்தியையும், தான்யங்களின் அறுவடையையும் அதிகப்படுத்திக் காட்ட வேண்டும் என்று அறிவித்ததாம், செஞ்சீன சர்க்கார். அதைக்கேட்ட சீன நாட்டுத் தொழிலாளர்கள், தூக்கத்தையும் மறந்தார்களாம்! "போங்கய்யா—போய் ஒழுங்காகச்சாப்பிடுங்கள் — சரியான நேரத்தில் போய்த்தூங்குங்கள்" என்று அவர்களைத் தொழில்நிபுணர்கள், வேண்டியும்கூட அவர்கள் கேட்கவில்லையாம். அப்படி வீராவேசத்துடன் பாடுபட்டார்கள் என்கிறது "மக்கள் செய்தி" எனும் சீன ஏடு. எப்போதுமே, தனது தன்னுடையதெனும் ஒருஉணர்வு உண்டாக்கப்பட்டுவிடுமாயின், அப்போது ஏற்படுகிற ஆர்வமே ஆர்வம்தான்! கூலிக்கு மாரடிப்பதினும் ஆர்வங்கொண்டுழைப்பதின் அருமை அருமைதானே!!

# ★ இந்தியத் தமிழர்களின் நிலை! ★

எழில் கொஞ்சும் ஈழ நாட்டிலே தமிழர்கள் யாரும் குழம்பாத ஆனந்த நித்திரையில் இருந்தனர். அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் அவர்களை மிகப் பயங்கரமாகத் தட்டி எழுப்பிற்று! இந்தியத் தமிழர்களின கடந்த கால வரலாற்றை ஆராய்ச்சி செய்வதில் காலத்தை வீணாக்குவதை விட, அவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டுமெனத் திட்டமிடுவது அவசியமானது.

இந்த முயற்சியில் இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் கவனம் செலுத்துவதற்குத் தகுந்த நேரமும் இதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தாவிட்டால், நமது வருங்காலச் சந்ததியை இலங்கையின் நிரந்தர அடிமையாக்கினோம் என்ற குற்றச்சாட்டிற்கு இலக்காவதோடு, தமிழ்த்தாயை ஒருவாய்க் கஞ்சிக்காக விற்பனை செய்தோம் என ஈழத்தின் சரித்திரம் பறைசாற்றிக் கொண்டிருக்கும். நாம் ஒரு முடிவில்லாத குழப்ப நிலையிலிருக்கிறோம்! ஒரு வழி சுதந்திரத்தை நோக்கிச் செல்கிறது. மற்றது அடிமைத்தனத்தை நோக்கிச் செல்கிறது! மானமுள்ள மனிதர்களாக வாழ்வதா? அல்லது நிரந்தர அடிமைகளாக வீழ்ந்துகிடப்பதா? இவைகள் தான் கேள்விகள்

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நாம்தான் இந்நாட்டின் பொருளாதாரத்துறையில் முதுகெலும்பு போன்றவர்களென்று, நமது சிங்களத் தோழர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். எங்களை அமைதியாக வாழவிட்டு இங்கிருந்து புறப்பட்டுச் செல்லுங்கள் என்று அவர்கள் இப்போது பதில்கொடுத்துள்ளார்கள். வெள்ளையர் இந்நாட்டைக் கைப்பற்று முன்னர் அவர்கள் சீரும், சிறப்புடனும் வாழ்ந்தனராம்! இந்நாட்டில் தேயிலை, இரப்பர், உற்பத்தி செய்து, குடியேற்ற நாட்டுப் பொருளாதார முறையில் வெள்ளையர் இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்டினர். சிங்களவர் குனிந்து வேலை செய்ய மறுத்தனர்! எனவே தென் இந்தியாவிலிருந்து ஆட்களை இறக்குமதி செய்தார்கள் வெள்ளையர்கள். தேயிலை, இரப்பர் மூலம் வந்த செல்வத்தை பிரிட்டனும், இந்தியாவும் பெற்றது! இந்த நாட்டைச் சுரண்டியவர்களில் இந்தியத் தமிழர்கள் முக்கியமானவர் எனக் குற்றம் சாட்டப்படுகிறது!

தமிழர்களின் உழைப்பின்றேல் இந்த நாடு சிந்துவாரற்றுப் போயிருக்குமென நாம் குன்றின் மீது நின்று உரத்த குரலில் கூவுகிறோம். "உழைப்புத்தேடி ஒரு சிங்களவனாவது வெளிநாடு செல்ல நாங்கள் அனுமதியோம்.

**இராமச்சந்திரன்**

தமிழர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்றதும், நாங்கள் எங்கள் பழைய கிராமீய வாழ்க்கை முறையை அமைத்து அமைதியுடனும் நிம்மதியுடனும், வாழ்வோம். தற்போதைய பொருளாதாரம், இந்த நாட்டின் உண்மை விரோதிகளான, வெள்ளையர்களுக்கும், இந்தியத் தமிழர்களுக்கும் மட்டுமே நன்மை செய்வதாக இருக்கிறது" எனச் சிங்களவர்கள் கூறுகிறார்கள்.

இந்நாடு "ஈழமாக" இருந்து "ஸ்ரீலங்காவாக" மாறியதும் வெள்ளையரின் அரசியல் ஆதிக்கம் தானாகவே விடைபெற்றுக் கொண்டது. அடுத்தபடி இங்கிருந்து விரட்டப்பட வேண்டியவர்கள் இந்தியத் தமிழர்கள் என்பது புரிந்தது! எனவே அதற்கேற்ப "பிரஜாவுரிமை"ச் சட்டம் தயாரிக்கப்பட்டது. தமிழர்களுக்குக் கிடைத்தது முதல் குத்து! இந்தத் திட்டத்தின்படி படிப்படியாகத் தமிழர்களை நாடு கடத்துவதென முடிவு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது! சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய வர்த்தக அமைச்சர் இதை அப்பட்டமாகக் கூறிவிட்டார். " இந்நாட்டுக்கு வருபவர்களைத்தான் . நாங்கள் தடைபோட்டு, கள்ளத் தோணிகளென்று கைது செய்கிறோமே தவிர, இந்த நாட்டிலிருந்துபோகிறவர்களுக்கு யாரும் தடைபோடவில்லை" என்று கூறியுள்ளார்.

இரண்டாவதாக தமிழர்களுக்குக் கிடைத்த குத்து...? இந்நாட்டை இலங்கையர்மயமாக்குதல். அதன்படி தோட்டத்திலுள்ள தொழிலாளர்களைப் படிப்படியாகத், தமிழர்களைக் குறைத்து, அதிலே சிங்களவர்களை அமர்த்துவது! அப்படிச் செய்யும்போது தோட்டத்தில் நிரந்தரமாக வாழ்ந்த (இந்தியா தெரியாத) தொழிலாளர்களின் பிள்ளைகளை இனிமேல் பதிவுசெய்யப்படமாட்டாது. இந்த உண்மையும் இப்போது வெளிச்சமாகிவிட்டது! சமீபத்தில் தொழில் அமைச்சர் வெளியிட்டுவிட்டார். இந்நிலையால் இனிமேல் உள்ள தொழிலாளர்களின்பிள்ளைகள் வேலையில்லாதவர்களாக ஆக்கப்படுகிறார்கள். 55-வயதிற்கு மேல் ஓய்வெடுக்கும் தொழிலாளர்களின் இடத்திற்குச் சிங்களவர்கள் நியமிக்கப்படுவார்கள். இது படிப்படியாக நடமுறைக்கு வருமென்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை,

மூன்ருவதாக இந்நாட்டிலுள்ள வெள்ளையர்களிடமிருந்து தோட்டங்களைக் கைப்பற்றல். அதுபற்றி நமக்கு அக்கரை இல்லை என்று கூறமுடியாது. காரணம், "தேசியமயம்" என்ற போர்வையில், வகுப்புவாத தேசியமயமாக்குகிருர்கள். மேலும் இந்நாட்டைவிட்டு வெள்ளையர்கள் வெளியேறிஞல், கண்டிப்பாகத் தமிழர்களுக்கு இப்போதுள்ள சலுகைகள் கிடைக்கப்படமாட்டாது. தற்பொழுது வெள்ளையரிடமிருந்து சிங்கள முதலாளிகைக்கு மாற்றப்பட்டுள்ள தோட்டங்களில் தமிழர்களின் நிலை கண்கூடாகக் காணக்கிடக்கிறது!

அடுத்ததாகத் தமிழர்களுக்கு கிடைத்த சரியான அடி, மொழி பறித்தல். "நியாயமான அளவு தமிழ் உபயோகம்" இதஞல் பாதிக்கப்படுபவர்கள் மலைநாட்டுத் தமிழர்களேயாகும். நியாயமான தமிழ் உபயோகம் வட கிழ், மாகாணங்களில்தானே தவிர, மலைநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களென்று சொல்லப்படும் பத்து இலட்சம் தமிழர்கள் வாழும் பகுதியில் இல்லை. அரசியலாரின் திட்டப்படி 1960ம் ஆண்டு தொடக்கம் எல்லாத் தொடர்புகளும் சிங்களத்திலேயே நடைபெறும். எப்படியோ தமிழர்களை (இந்தியர் என்று சொல்பவர்களை) படிப்படியாக நாடு கடத்தும் திட்டம் நடைபெற்று வருகிறது.

எனவே, இனிமேலும் இலங்கை அரசியலாரை நம்பித் தமிழர்கள் வாழ்வதற்கில்லை. காடைத்தனத்தையும். கருங்காலிகளையும், அரசாங்கமே உற்பத்தி செய்கிறது! இது பட்டவர்த்தனமான உண்மையிலும் உண்மை. "தட்டிக்கேட்க ஆள் இல்லையேல் தம்பி சட்டப்பிரசண்டன்" என்பது போல் தமிழர்களை நாடற்றவர்கள் என்ற பட்டம் சூட்டி, அவர்களை எது வேண்டுமாஞலும் செய்யலாமென்ற எண்ணத்துடன் அரசாங்கம் முடிவுகட்டிவிட்டது.

நேருபண்டிதர் உலகபவனி வருவதற்கே நேரமில்லை என்று சலித்துக்கொள்ளும்போது, தமிழர்களைப்பற்றிக் கவலைகொள்ள நேரமேது? நினைப்புத்தான் வருமா? இல்லை, சென்னையிலே கொலுவீற்றிருக்கும் தமிழக மந்திரிகளாவது இலங்கையிலுள்ள தமிழர்களைப்பற்றி அக்கரையோடு ஏதாவது முயற்சி எடுத்து அவர்களின் மேல் தங்களின் அன்பைச் செலுத்துவார்களா என்ருல் இல்லை. சிறுபிள்ளைகள்தான் சொல்லுவார்கள் "குன்னக்குடிக்குக் காவடி எடுத்தாலும் முடியாது" என்று. அதுபோல சென்னை மந்திரிகள் டில்லிக்கு காவடி தூக்கிஞலும் அதை இந்திவாலாக்கள் பொருட்படுத்துவதாக இல்லை.

சிங்கள நாட்டிலே கூலிகளாக, கேலிப் பொருட்களாக, நாடற்றவர்களாக, நாதியில்லாதவர்களாக, அடிபட்டு உதைபட்டு ஒண்ட இடமில்லாமல் ஓடத் திசைதெரியாமல் கற்பைக்காக்கக் கடலிலே விழுந்தோர் கணக்கில்லை! பள்ளிக்குச் சென்ற பாலகனை அள்ளி அணைக்கச் சென்ற கைகளை வெட்டிவீழ்த்திய வெறிச்செயல் கொண்ட சிங்களவனைத் தட்டிக்கேட்கத் தமிழகத்திலே ஆள் இல்லை. அப்படிப்பட்டவர்களைத் தமிழ் நாட்டு ஆட்சிப்பீடத்திலே அமர்த்தி இருக்கிருர்கள். திராவிடப்பெருங்குடி மக்களே! எங்கள் குறைகண்ட இனிமேலாவது உங்களுடன் பிறந்தவர்களின் வாழ்விற்கு வழிதேடமுன் வருவீர்களா? இலங்கையிலே இன்னல் பல அனுபவிக்கும் உங்கள் சகோதரர்களின் வாழ்விலே மறுமலர்ச்சி காண வேண்டியாவது நாட்டை ஆளக்கூடிய தகுதி வாய்ந்தவர்களுக்கு உங்களின் வாக்குரிமையைக் கொடுங்கள். இலங்கையிலே நாடற்றவர்களாக, நாதியற்றவர்களாக, நடைப்பிணங்களாகத் தமிழர்கள் வாழவேண்டுமா? நாடாள்வோர் நல்லவராய் இருந்திருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு இந்த இன்னல்கள் நேர்ந்திருக்குமா?

நடந்தவைகள் நடந்தவைகளாகஇருக்கட்டும். இனிநடப்பவை நல்லவைகளாக அமையட்டும். காந்திசெத்த அன்றே காங்கிரசும் செத்துவிட்டது! பிரியுங்கள் நாட்டை! அழையுங்கள் உழைத்து உழைத்து உரமேறிய இலங்கை வாழ் இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களை! தேயிலையைக் கிள்ளிச் செல்வத்தை அள்ளிச் சிங்களவர்களுக்கு கொடுத்த கைகள், சேலத்திலே இரும்பையும் எஃகையும் தோண்டி எடுத்து திராவிட நாட்டுக்கு உரமாக்கட்டும். ○

குறைந்த விலையில்! ★ சிறந்த முறையில்!!

"திராவிட நாடு" பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும்

கருத்துப் படையல்கள்.

வண்ண முகப்புடன், எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும். விலை 8 அணதான்!!

# "காதற் காட்சி"

—[அ. சுந்தரம்]—

வீதி வழியாக உலா வந்த பாண்டியனை நங்கையொருத்தி கண்டாள். கண்டதும் அவன் பேரில் காதல் கொண்டாள். அன்று முதல் ஒரே ஏக்கம். தாமரைபோன்ற அவளது முகம் வாடிப்போயிற்று. கைகள் மெலிந்துவிட்டன; தோள்கள் துவண்டுபோயின. இங்நிலையிலும் பாண்டியனை மறக்கவில்லை. மறக்கத்தான் முடியுமா?

மனச்சோர்வை—துயரத்தை—அகற்ற மலர்ச்சோலை சென்றாள்; மனத்துயரம் அதிகமாயிற்றே தவிர, குறைந்தபாடில்லை. மாலை போய் இரவு வந்ததும் வீடு வந்தாள். உணவுகூடச் சரியாக உண்ணாமல் உறங்குவதற்குச்சென்றாள். உறக்கமாவரும்? மீண்டும் பாண்டியனைப் பற்றியே சிந்தனை. நீண்ட நேரம் கழித்துச் சிறிது உறக்கம் வந்தது.

அந்தஇரவு, சந்தனம் மார்பைத் தழுவ-புதிய மலர்களால் தொடுக்கப்பட்ட தேனூறும் மாலையை அணிந்துள்ள பாண்டியன் அவள் அருகே வந்தான். உறவாடி உவகை பெறவேண்டுமென்று எண்ணி எண்ணி ஏங்கிய அந்த ஏந்திழையாள் பாண்டியனோடு ஊட ஆரம்பித்தாள். அவன் பலப்பல கூறிப் பார்த்தான். எதையும் அவள் பொருட்படுத்தவில்லை. எத்தனைநேரம் இப்படி இருப்பது? இருக்கத்தான் முடியுமா? ஊடுதல் இன்பந்தான்! ஆனால் அந்த இன்பத்திலும் இன்பம் கூடல்தானே! ஊடல் புரிந்த நங்கை அதையொழித்து, அவன் அருகே சென்றாள். அவனோ அவள் அருகில் வந்ததும் விலகிச் சென்றான். அவள் எவ்வளவோ கூறியும் தெளியவில்லை. ஊடல் முடியவில்லை.

கனவு கலைந்தது. இரவு கழிந்து பகல் வந்தது. ஊடுதலும், ஊடல் நீங்கிக் கூடுவதிலும்தானே இன்பம் காணமுடியும்.

உறவாடி உவகை பெறவந்த ஊராள்வோனோடுதான் ஊடிநின்றதையும், மனம் மகிழ்விக்க வந்த மன்னவனை மனம் கலங்கச் செய்ததையும், கனிமொழி உதிர்த்த காவலன்மீது கணைகள் தொடுத்ததையும், குலவி இன்பம் பெற வந்த கொற்றவன் பேரில் கோபம் கொண்டதையும் எண்ணிஎண்ணி ஏங்குகிறாள்.

ஊடுதலிலேயே இரவு கழிந்து போனதையும்; ஊடுதல் நீங்கிக் கூடி முயங்கப்பெறும் இன்பத்தைத் தான் இழந்துவிட்டதையும் நினைத்து வெட்கமும், வேதனையும் அடைகிறாள்.

தோழி வந்தாள்! சோகமுற்றிருக்கும் தலைவியைக்கண்ட தோழிக்கு வியப்பு மேலிடுகிறது. நடந்தது என்ன என்பதை அறிய ஆவல் கொள்ளுகிறாள். ஆனால் அந்த நிலைமையில் எவ்வாறு கேட்பது? என்ன கேட்பது? என்று நினைக்கிறாள். தலைவியை அணுகி மெல்லக் கேட்கிறாள் தோழி:—

ஏனம்மா! சோகமாகக்காணப்படுகிறீர்கள்! அப்படி என்னம்மா நடந்தது?

தலைவி:- போடி! போய் உன் வேலையைக் கவனி!

தோழி:- ஏன்? — வெறுப்போடு பேசுகிறீர்!

தலைவி:- என் வேதனை எனக்கு! உனக்கெப்படித்தெரியும்-ஏண்டி! நான்தான் அறிவும அனுபவமும் இல்லாதவள் ஆயிற்றே!

தோழி:- அது தங்கள் வாய்மொழியிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது! மனம் சஞ்சலம் அடையும் விதத்திலே அப்படி என்னம்மா நடந்தது?

தலைவி:- கேள் தோழி! என் முட்டாள்தனமான நடத்தையை என்னென்பேன்! என்னோடு கூடிச் சுகம் பெறுவதற்காக என் அருகே அவர் வந்தார்!

தோழி:- வழுதிதானே? அம்மா!

தலைவி:- ஆமாம்! அவரேதான்!

தோழி:- அளவிலா மகிழ்ச்சி! நீண்டநாள் எண்ணம் நிறைவேறியது! இன்பந்தானே?

தலைவி:- முழுவதையும் கேட்காமல் இப்படிப் பேசுகிறாயே!

தோழி:- என்னம்மா இது! மகிழ்ச்சிகொள்ளவேண்டிய நீங்கள் மனவேதனைப்படுவதா?

தலைவி:- மகிழ்ச்சியா? அதுதானே இல்லை! கேளடி! அவர் என் அருகே வந்தார் என்றேன் அல்லவா? அப்பொழுது நான் என்ன செய்தேன் தெரியுமா?

தோழி:- எனக்கெப்படித்தெரியும்!

தலைவி:- குறும்புக்காரியடி நீ! என் முட்டாள்தனத்தை என்னென்பது? நான்விலகி நின்றுகொண்டேன்!

தோழி:- என்ன!

தலைவி:- ஆமாமடி! கூடுதலுக்கு முதல் கட்டம் ஊடுதல்தானே! நான் அதைச் செய்தேன். அப்பொழுது அவர் என்ன செய்தார் தெரியுமா?

தோழி:- நெருப்பாகிச் சுட்டெரித்தாரா?

தலைவி:- இல்லை! குளிர்புனலானார்! கனிமொழிகள் தேன்மாரி பொழிந்தார்.

தோழி:- தங்கள் மனம் இளகி...

தலைவி:- பாதகி நான்! அது போதும் இணங்காது மறுத்துவிட்டேன்.

தோழி:- குளிர்புனல் பொங்கு கனலாகி இருக்கும்! கனிமொழி கனல்மொழியாக மாறி இருக்கும்!

தலைவி:- இல்லையே! மீண்டும் அதே இன்மொழிகள்தான்! எவ்வளவு நேரம் என்றால்தான் பொறுக்க முடியும்! என் மனமும் அவரோடு உறவாடி இன்பம் பெறுவதைத்தான் எதிர்பார்த்தது? — எனவே இணக்கத்தின் அறிகுறியாக அவர்

[11-ம் பக்கம் பார்க்க]

# "பேசக் கற்றவர்கள்"

—[ஆரூர்ச் செல்வன்]—

"நன்ருகப் பேசக் கற்றவர்கள்" என்று அடிக்கடி சிலர் ஒரு சாராரைப்பார்த்துச்சொல்லிக்கொண்டு வருகிருர்கள். அதே நேரத்தில் "இவர்களைப்போல் பேசும்வன்மை படைத்தவர் நம்மிடையே இல்லையே" என்று மனதிற்குள் அங்கலாய்த்துக் கொள்கினுர்கள். சில சமயம் பேசியும் பார்க்கின்ருர்கள். வான்கோழி கொண்ட ஆசையைப் போல. பாவம்! அடிவயிற்றைத் தடவிப் பார்க்கும் மலடியைப் போலவும், எழில் வானைக்காண விழி திறக்க முயலும் குருடனைப் போலவுமான நிலையடைந்து விடுகிருர்கள!

பல முள்வேலிகளைத் தாண்டி, மொய்க்கும் நச்சரவின் கூட்டத்தைக் கடந்து வானத்து நிலவாய் — வெண்கலத்து ஒலியாய் — தேனொத்த இசையாய் — தெவிட்டாத கருத்துக் கருவூலமாய் நிற்கும் தமிழ்ப் பேச்சு நடை, ஒரு சாராருக்கே சொந்தமா? என்ருல் இல்லை! இல்லை! இத்தாலியினின்று இவண்போந்து கற்றுத் தெளிந்து கவிபாடிய தைரியநாதனெனும் வீரமாமுனிவர் கற்ற தமிழ்! யார் வேண்டுமானுலும் பேசலாம், படிக்கலாம், பழனெழுக, பண்பொழுக சொற்பெருக்காற்றலாம்.

இப்படி, புவிபோற்றும் பொற்குடமாய் — புல்லரையும் புகழும் தெள்ளுதமிழ் நடை—கண்ணெழுகப் பேசும் பேச்சு, ஒரு சாராருக்கே சொந்தமென்ருல், மக்களின் உரிமைக் குரலை எழுப்பியபோதெல்லாம், மானங்காக்க அறப்போரில் ஈடுபடும் நேரததிலெல்லாம்—ம்— என்ருல் சிறைவாசம்—அம் என்ருல் இன்னும் ஆறுமாசம் என்று பொருமையினுலும் பொச்சரிப்பினுலும், "அழகாகப் பேசக் கற்றுக்கொண்டிருக்கின்ருர்கள் - அடுக்கு மொழி வல்லுனர்கள் — இவர்கள் கொட்டத்தை ஒடுக்கவேண்டு" மென்று தொட்டதற்கெல்லாம் குற்றம் விளைவித்து, சிறையும், தண்டனையும் கொடுத்த வன்னெஞ்சர் பழிதுடைக்க, வளர்ந்த மொழியின் முன்னேற்றம் — ஒரு பேச்சுக்கலை — தமிழரின் ஆட்சிக் கலை என்றுகூடச் சொல்லலாம். ஆளும் பெருங்கட்சியும் அரசியல் போராட்டத்திலே ஈடுபட்டது தானே— அணியணியாய்ச் சிறைவாசம் அனுபவித்தவர்கள்தானே, அவர்களுக்குக் கிட்டாத தமிழ்ப் பேச்சுக்கலை-- இவர்களுக்கு மட்டும் எப்படி எட்டியதென்ற ஐயப்பாடு எழலாம்! மலர் இருந்தாலல்லவா நாருக்கு மணம் ஏறும்! நாரும் மணம் பெறும்! ஆனுல் இன்றோ, அழகு தமிழ்ப் பேச்சு—மிடுக்கான நடை—சொல்லலங்காரம்-- அலங்காரத்திலே ஆயுங்கருத்துக்கள்— கருத்துக்களை ஏற்றுக் கடலலையெனப் பின்வரும தமிழர் பெருமக்கள்! இத்தகைய தலைவர்களை- தலைமையைச் சூழ்ந்த மக்களை சிறையிலும், தண்டனையிலும், அபராதம் விதித்தும் வந்தால், பேசக் கற்பவர்கள் வளராமல் பின்னென்ன மோசக் கருத்துக்களை மொழிபவர்களாகவா வளருவார்கள்! மேலும் இவ்வாறு தண்டனை அடையும் உள்ளங்களின் குமுறல்கள் செந்தமிழாய்—தெவிட்டாத கருத்துப் பொழிவுகளாய்—வெளிவரத்தான் —வெளிவரும் வீர உரைகள் கோழைகளின் ஆட்சிக்குக் குண்டு மழையாய் — கூர்வேல்களாம் பாமத்தான் என்று நினைக்கும் போது, செந்தமிழ் ஆசான்—நள வெண்பா காவிய கர்த்தா புகழேந்தியின் காலத்து நிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகிறது.

பாண்டியன் மகள் கற்பகவல்லியின் காதலில் மூழ்கிய சோழன் குலோத்துங்கன், தன் அவைக்களப் புலவர் ஒட்டக்கூத்தரை மணம் பேசிவரும்படி, பாண்டிய நாட்டிற்கு அனுப்பினுன். பாண்டியன் அவையில் ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்தியாருக்கும் வீராப்பான உரையாடல் நடந்தது. அதில் ஒட்டக்கூத்தர் சிறிது தோல்வியுற்ருர்! பேச்சால் வென்றபுகழேந்தியின்பால் அழுக்காறு கொண்டான் ஒட்டக்கூத்தன். இருப்பினும் மணவோலை பெற்றுவந்தான். சோழனுக்கும் கற்பகவல்லிக்கும் திருமணம் முடிந்தது.

பாண்டிய நாட்டில் பைங்கொடியாள் மையலில் மயங்கி வாழ்ந்த சோழமன்னன் தன் ஆட்சியை ஒட்டக்கூத்தன்பால் ஒப்படைத்திருந்தான. அதுபோழ்து பாண்டிய நாட்டினின்று புகழேந்தியார் சோழநாடு சென்ருர். வாய்த்தது வாய்ப்பு, கீழே தண்ணீர் குடித்த ஆட்டுக்குட்டியின்மேல் வீணைப் பழிசுமத்திய ஓநாயைப்போல் புகழேந்தியின்மேல் குற்றஞ்சாட்டிச் சிறையிலடைத்தான் ஒட்டக்கூத்தன! அதுமட்டுமா, தெருவிலே பாடிப் பிழைததுக்கொண்டிருந்த குயவன் முதலிய எழுவரையும் ஏற்கனவே சிறையில் அடைத்திருந்தான் ஒட்டக்கூத்தன்! தமிழ்த் தலைவனைக் கண்ட எழுவரும் தாள்பணிந்து வருந்தினர். "நீங்கள் சிறை புகுந்தது ஏன்?" என்ருர் தமிழாசான். "நாங்கள் பாடும் பாடல்களைக் குற்றமெனக் கூறுகிருன் கொடும்பாவி ஒட்டக்கூத்தன்" என்றனர். "அப்படியா? நன்ருகப் பேசிவிட்டால், பாடிவிட்டால் போதும், பொருமைப்படுகிருன் அந்தப் பாவி! இதோ நீங்கள் செந்தமிழ் யாப்பு முறையை, சீர், அசை, தளைகளோடு, சொல், பொருள், அலங்காரத்தோடு கற்றுக் கொள்ளுங்கள். அவன் கர்வம் அடக்கும் சமயம் வாய்க்குமேயானல், சாடுங்கள் கவியால்! தேடுங்கள் புகழ்!" என்று அனைத்தையும் எழுவருக்கும் செவ்வனே பாடம் புகட்டினுர் புகழேந்தி.

சோழன் நாடு திரும்பினுன்; சிறைப்பட்டோர் சேதியறிந்தான்; கேட்டான் காரணத்தை; நாட்டுத் துரோகிகள் எனருன் ஒட்டக்கூத்தன். விசாரணை துவங்கட்டும் என்ருன் மன்னன். மன்றம் கூடியது.

கேள்வியை அள்ளி வீசுகிருன் அதிகாரபோதையில் ஒட்டக்கூத்தன். 'தமிழென்ற யானையையே எதிர்த்தவன் நீ யாரடா?" என்ருன் குயவனைப்பார்த்து. இதோ அவன் விடுத்த கேள்விப்பாட்டு,

"மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி
யானைமுன்நின்று எதிர்த்தவன் யாரடா?"

பார்த்தான் குயவன். தன் பாட்டையே பழித்தவனல்லவா கூத்தன். விடுத்தான் பதிலை "ஏ! யானையே, நீ யானையென்றால், நான் அந்த யானையை அடக்கும் அங்குசம்! இல்லை, இல்லை, கூனையும், குண்டுசட்டிகளையும் செய்யுமங்குசப்பயல் நான்தான" என்ற சொல்லம்பை, சிலேடைப் பொருளிலே சித்தரித்தான் அழகுச் சொற்களினால். இதோ அவன் பதில் பாட்டு:-

"கூனையுங் குடமும் குண்டு சட்டியும்
பானையுஞ் செயுமங் குசப்பயல் யான்"

"ஐயோ! பாவம்! பிழையாகப் பாடுவான் என்றிருந்தான கூத்தன், கடல்மடை திறந்தாற் போன்று கவிமழையன்றோ பொழிகின்றான்" என்று கருத்தழிந்தான். பேச்சால் வென்ற குயவனுக்குப் பரிசளித்து விடுதலைநல்கினான் வேந்தன.

சுருதி குறைந்தது கூத்தனுக்கு! "ஐய! எம் அவையில் வந்த நீர் யார்?" என்றான் அடுத்து வந்த கொல்லனைப் பார்த்து கூத்தன். குறடுகொண்டு ஆணி பிடுங்கும் கொல்லனல்லவா! தன் பாட்டைப் பழித்துப் பாழ்சிறையில் தள்ளிய கூத்தனை, சிறையில் கற்ற செந்தமிழால் கூத்தனின் செருக்கொழிக்க எண்ணினான். விடுத்தான் பதிலை, "என் பெயர் செல்லப்ப ஆசாரி மகன் திருவேங்கடன்; தொழில் கருமான்; என் கவியைக் குறை சொல்லுவோரை பல்லைப்பிடுங்குவேன், பருந்திடம் இடைத்த கோழிக்குஞ்சுபோல் வருத்துவேன்; கவியென்ற இரும்பாணியினால் அல்லும் பகலும் அடிப்பேன" என்று திடத்துடன கூறினான். அக்கொல்லன் விடுத்த கவியைப் பாருங்கள்:—

"செல்வன் புதல்வன்
திருவேங்கடவன் செகத்குருவாங்
கொல்லன் கவியை
குறைசொல்வோரை குறடுகொண்டு
பல்லைப்பிடுங்கி பருந்தாட்ட
மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும்
அடிப்பேன் காண்"

ஆகா! என்னே சொல்வளம். பேச்சுத்திறமை, கவித்திறமை, கவியை ஆணியாக்கி, மாற்றார் தூற்றலை பல்லாக்கி, சொல்லைக் குறடாக்கி அடிப்பானும் அல்லும் பகலும். பரிசடைந்து விடுதலை பெற்றான் கொல்லன்.

இங்ஙனமே மற்றையோரும் ஆட்சியின் கேள்விமை அடக்கினர் அழகு தமிழால். கவியைக் கேலி செய்து காராக்கிரகத்தில் அடைத்ததனால் கவிகற்று அடக்கினர் அன்று. தமிழினத்தை இகழ்ந்துரைக்காதே' ஏற்றத்தாழ்வு ஏன்? பாற்குடத்தில் பச்சை விஷம் ஏன்? என்று கேட்டால் பரிசாக காராக்கிரகமும், அபராதமும், கொடுமையும் பரிசளித்தால், புண்பட்ட உள்ளத்தினர் — உள்ளத்தின் நற்கருத்தைப் பொதுமக்களுக்குச் சொல் வடிவமாக எடுத்துரைக்க, பேசக் கற்றுக்கொள்ளாமல் பின் என்ன ஏசவா கற்றுக்கொள்வார்கள்.

தமிழை விரும்பியவர்கள் சிறையகத்தும் பாடக்கற்றுக்கொண்டார்கள் அன்று. தண்டமிழை உயிரெனக்கொண்டவர்கள் தகாத ஆட்சியின் கீழ் பேசக் கற்றுக்கொண்டவர்கள் பெருகுகிறார்கள் இன்று. தமிழை விரும்பாதவர்களன்றோ, அழகுப் பேச்சையும், ஆயுங் கருத்துப் பொழிவுகளையும் கேலி செய்வார்கள்! இப்படிப்பட்டவர்களைத் தமிழர்கள் எனறோ, தமிழ் பேசத் தெரிந்தவர்கள் என்றோ எபபடி ஒப்புக்கொள்ள முடியும்?

❋

வெளிவந்துவிட்டது

**திராவிடர் நாட்குறிப்பு 1959**

இந்த டைரியில், பக்கத்துக்கு ஒன்று வீதம் உலகப் பேரறிஞர்களின் 365 பொன்மொழிகளும், தி. மு. கழக முழு விவரங்கள், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தி. மு. க. கிளைகளின் விவரம் சொற்பொழிவாளர் முகவரி அஞ்சல் செய்திகள் முதலியன உள்ளன

**450-பக்கம் விலை ரூ. 1—2—0**
**கழிவு 20 சதம்**

**தி. மு. க. தலைவர்கள் படம்**

19-தி. மு. க. தலைவர்களின் உருவங்கள் நான்கு நிறத்தில் ஒரே தாளில் அச்சிடப்பட்டது. 15X20 அளவு.

**படம் 1-க்கு விலை அணா 8.**
**மேற்படி படம் காலண்டருடன் அணா 9.**
**கழிவு 25 சதம்.**

தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

மேலாளர், எண் 147, பவழக்காரத்தெரு, சென்னை-1.

9-ம் பக்கத் தொடர்ச்சி

அருகே நான் சென்றேன்! சென்றதும்......

தோழி:- ஆரத்தழுவி முத்தங்கள் ஆயிரம் தந்திருப்பார்.

தலைவி:- அதுதான் இல்லை! என்னென்பேன்! அன்போடு அணைத்துக்கொள்ளாதது மட்டும் அல்ல—விலகி நின்றார்!

தோழி:- உண்மையாகவா?

தலைவி:- ஆமாம்! நான் அருகே செல்லச்செல்ல அவர் விலகி விலகிச்சென்றார். நானோ இனன தென்று அறியாது திகைத்து நின்றேன்.

தோழி:- உங்கள்மீது அவருக்குக் கோபம். விரும்பி அவர் அழைத்தபோது......

தலைவி:- நான் என்ன செய்வேன்? நான்தான் ஏதோ தெரியாமல் நடந்துகொண்டேன். அதற்காக அவரும் அப்படி நடந்துகொள்ளவேண்டுமா? உனக்குத்தான் தெரியுமே என் இயல்பு! அவர்மீது எவ்வளவு அன்பு எனக்கு?......

தோழி:- பெண்களின் துயரம் ஆண்களுக்கு எங்கிருந்து தெரியப்போகிறது?

தலைவி:- எனக்குத் தெரிந்த அளவிலே அவரைப்போலவே நானும் பலப்பல கூறிப்பார்த்தேன். அதுபோதும் அவர் தெளிவுபெறவில்லையடி! தேனூறும் மாலையணிந்த — சந்தனம் தவழும் அவரது மார்பைத் தழுவாமலேயே இரவு கழிந்துவிட்டதே! என் செய்வேன.

ஏக்கத்தோடு கூறி முடிக்கிறாள் தலைவி. ஆறுதல் கூறவல்லார் யார்? வேண்டுமானால் பாண்டியனால் முடியும்! அவனுக்கு இதுவா வேலை? — நாடுகாப்போன் ஆயிற்றே!

கற்பனை கலந்த இந்தக் காதற் காட்சி முத்தொள்ளாயிரத்திலே காணப்படுகிறது. அந்தச் சொல்லோவியத்தை—காதற் காட்சியை நாமும் காண்போம்! இதோ:-

யானூடத் தானுணர்த்த யானுணரா
விட்டதற்பின்
தானூட யானுணர்ந்த தானுணரான்-தேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தா திராக்கழிந்த வாறு.

★

# வண்ணத்தில் வார்த்தைகள்

வானவில்லைக் கண்டவுடன் புலவனும் ஓவியனும் கற்பனைக் குதிரையைத் தட்டி ஓட்ட முயலுவர். நாமோ அதன் எழில் வண்ணங்களைக் கண்டு மகிழ்வோம். எழில் வண்ணங்கள் இல்லையேல் உலகில் அழகே இல்லை எனலாம். வண்ணங்கள் நம் உள்ளத்திற்குக் களிப்பை ஊட்டுவதுபோல் அதனால் அமைந்த சில வார்த்தைகள் மொழிக்கு அழகையும் சிறப்பையும் அளிக்கிறது.

"நீலக்கடல்" "நீலவானம்" "கருங்கூந்தல்" என்றெல்லாம் திட்டுகிறோம். மாசற்ற மனதை "வெள்ளை உள்ளம்" என்றும், மிகவும் வெளிப்படையாகப் பேசுவதை "பச்சையாகப் பேசுவது" என்றெல்லாம் கூறுகிறோம். சில தொடர்கள் ஒவ்வொன்றும் தன்னுள் ஒரு வரலாற்றை அடக்கியிருக்கும். பெரும்பாலான வார்த்தைகளும், தொடர்களும் ஆங்கில மொழியில் ஏற்பட்டதென்றாலும், அவைகள் உலக மக்களால் தங்கள் மொழிகளிலும் தேவை, பயன் கருதி உபயோகப் படுத்தப்படுகிறது. அதிலும் செய்தித் தாட்கள் அடிக்கடி அந்தப் பதங்களைக் கையாளுவதால் அவற்றை அறிந்துகொள்வது பயன் தரும்.

இன்ன கொள்கை குறித்து அரசாங்கம் "வெள்ளை அறிக்கை" ஒன்று வெளியிட்டது என்று செய்திவரும். இதென்ன வெள்ளை அறிக்கை! இங்கிலாந்தில் பாராளுமன்றக் குழுக்களின் அறிக்கைகள் அரசாங்கக் கொள்கைகள் இவைகளை அச்சிட்டு விற்பனைக்கு வழங்கி வந்தனர். அவைகள் அதிகாரபூர்வமானவை. அதை "வெள்ளை அறிக்கை" என்று கூற முற்பட்டனர். அதிலிருந்தே அரசாங்கம் வெளியிடும் அதிகாரபூர்வமான அறிக்கைக்கு அப்படிப் பெயர் வந்தது.

பட்ஜட், மற்றும் சில குறிப்பிட்ட கொள்கை மாற்றங்கள் இவைகள் வெளியிடும்வரை இரகசியமாக வைக்கப்படவேண்டியவை. இவைகள் முன்னமேயே எப்படியோ தெரிந்துவிட்டால் செய்தித் தாட்கள் கண்டனக்குரல் எழுப்பும். அப்போது அவைகள் அந்த இரகசியங்கள் "புளு பிரிண்ட்" சமயத்தில் அம்பலமாகிவிட்டது என்று எழுதும். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கும் பொருள்களை அச்சிட்டு வழங்குகையில் அதற்கு ஊதா வர்ணத்தில் அட்டைபோட்டு வழங்குவார்களாம். அதை "புளுபுக்" என்று கூறுவர். ஊதா புத்தகத்தில் உள்ள பொருள்கள் அவைகள் வெளியிடும்வரை இரகசியமாக வைக்கப் படவேண்டியவை.

தி. தாயுமானசாமி

சில நாட்டு அரசாங்கங்கள் தங்கள் அறிக்கை முதலானவற்றைக் குறிப்பிட்ட வர்ணத் தாட்களால் தான் அட்டை போடுவார்களாம்! சைனாவும், பிரான்சும், மஞ்சள் நிற அட்டையும், சப்பான் சாம்பல் நிற அட்டையும், ஸ்பெயின் சிவப்புநிற அட்டையும், போர்ச்சுகல் வெள்ளைநிற அட்டையும், இத்தாலியும், மெச்சிகோவும் பச்சைநிற அட்டையும் உபயோகப்படுத்துகின்றன.

அமெரிக்கா அயல் நாட்டுடன் தொடர்புகொள்ளும் வகையில் வரையும் கடிதங்கள் முதலானவற்றிற்கு சிவப்புநிற அட்டை போட்டு அனுப்புவார்களாம்!

"சிவப்புநாடா முறை" பலர் அறிந்ததே. அரசாங்க அலுவல்கள் பல அதிகாரிகள், அமைச்சர்கள், சட்டமன்றங்கள், பாராளுமன்றம் இவைகள் மூலம் முடிவெடுக்கப்படுவதால் தாமதமேற்படும். இந்த முறையை "சிவப்பு நாடா முறை" என்று கூறுவர். இப்படி இதை முதன் முதல் அழைத்தது ஆங்கில இலக்கிய மேதை சார்லஸ் டிக்கன்ஸ். பின் கார்லைல் அந்தப் பதத்தை அடிக்கடி தம் படைப்புகளில் உபயோகப்படுத்தி அதை உலகம் அறியும்படி செய்துவிட்டார்.

"மஞ்சள் பத்திரிகை" என்றவுடன் அதிர்வேட்டுச் செய்திகளும், அவதூறான புனைந்துரைகளும் எல்லோர் கவனத்திற்கு வரும். பொய்யோ, மெய்யோ அவைகளை அசிங்கமாகவும் அருவருக்கத் தகுந்த மொழியிலும் எழுதிவரும் பத்திரிகைகளை "மஞ்சள் பத்திரிகை" என்றழைக்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் அமெரிக்காவில் சில பத்திரிகைகள் இப்படிப்பட்ட செய்திகளை மஞ்சள் குறியிட்டு "அபாயம்" எனற தலைப்பின்கீழ் வெளியிட்டன. மற்றும் சில பத்திரிகைகள் விலை மலிவு காரணமாக மஞ்சள் நிறத் தாட்களை உபயோகப்படுத்தி வந்தன. அப்போது அந்தப்பத்திரிகைகளை "மஞ்சள் பத்திரிகை" என்றழைக்க ஆரம்பித்து நாளடைவில் அது உலகறியும் பதமாக வந்துவிட்டது.

கலை அரங்கில் கலைஞர்கள் ஒதுங்கும் அறை "கிரீன் ரூம்" என்றழைக்கப்படுகிறது. முன் காலத்தில் பாரிசில் உள்ள அரங்

கங்களில். ஒளிமிகுந்த விளக்குகள் முன் ஆடும் கலைஞர்கள் ஒதுங்கும் அறைகள் தண்மையாக இருக்க உட்புறச் சுவர்களுக்குப் பச்சை வர்ணம் பூசப்பட்டிருக்குமாம். அதனால் அவ்வறைகளைப் பச்சை வர்ண அறை என அழைக்க ஆரம்பித்தனர்.

மேல்நாட்டினர் அதிர்ஷ்ட தினத்தை "சிவப்பு எழுத்து நாள்" என்று கூறுகின்றனர். காரணம் நாட்குறிப்புகளில் மத குருக்களின் பிறந்த நாட்கள் சிவப்புமையில் அச்சிடப்பட்டிருக்குமாம்.

ஒழுங்கீனர்களின் பட்டியலை "கரும்பட்டியல்" என்றழைப்பதுண்டு. உலகப் போரின்போது சர்மனியநாட்டின்மீது இங்கிலாந்து பொருளாதார முற்றுகையிட்டபோது நடுநிலை நாடுகளான நார்வே, ஸ்வீடன், ஸ்விர்ஸர்லாந்து நாடுகள் அதற்கு இணங்க மறுத்தன. அந்நாட்டு வர்த்தகக் குழுக்கள் எப்போதும்போல் சர்மனியுடன் வர்த்தகம் செய்தன. சீற்றங்கொண்ட இங்கிலாந்து அந்தக் குழுக்கள் அடங்கிய பட்டியல் ஒன்று வெளியிட்டு அதை "பிளாக் லிஸ்டு" என்று பெயரிட்டது. அந்தப் பட்டியலிலுள்ள குழுக்களுடன் ஆங்கிலேயர்கள் வர்த்தகத் தொடர்பு கொள்ளக் கூடாது என்று ஆணையிட்டது. அதிலிருந்துதான் "கரும்பட்டியல்" எழுந்தது.

"கருப்புச் சந்தை" "கருங்காலிகள்" இவைகள் அனைவரும் அறிந்ததே.

ஒருவனுடைய இரகசியம் ஒன்றைப் பயன்படுத்தி அவனை மிரட்டிச் சலுகைகள் பெறும் குற்றத்தை "பிளாக்மெயிலிங்" என்று கூறுவதுண்டு, இந்தக் குற்றத்தைத் தண்டிக்க ஆங்கில, அமெரிக்கச் சட்டங்களில் தனிப்பிரிவுகள் இருக்கின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் கனக்டிகட், நியூ ஹேவன் குடியேற்றப் பகுதிகளில் மனிதனின் தனிப்பட்ட ஒழுக்க பழக்க வழக்கங்கள் இவைகளில் தலையிடும் வகையில் சில சட்டங்கள் இயற்றப்பட்டன, என்ன காரணம் கருதியோ அவைகளை "ஊதாச் சட்டம்" என்றழைத்தனர். இன்றும் அமெரிக்காவில் அதுமாதிரி ஏதாவது சட்டம் இயற்றினால் அதை "ஊதாச் சட்டம்" என்று கூறுகின்றனர். அமெரிக்காவில் மதுவிலக்குக் கொண்டுவந்த நேரத்தில் அதை "ஊதாச் சட்டம்" என்று கூறிக் கண்டித்தனர்.

"வண்ணங்கள்" முற்காலத்தில் வேற்று நாட்டுப் போர்ப்படைகளின் வேற்றுமைகளை உணர்த்தும், சொல்லாகப் பயன்பட்டது. நடைமுறையில் வழங்கும் (கொச்சை) சொல்லாக இருந்தாலும், இது உலகப்பெயர் பெற்ற சொல். ஒவ்வொரு நாடும் கொடிகள் ஏற்படுத்திக்கொள்வதற்கு முன் சில பல சின்னங்களை "வண்ணங்களாகக்" கொண்டிருந்தன. போரின்போது அந்த "வண்ணங்களைக்" காப்பதே கடமையாகும். மொகஞ்சாதாரோ புதைபொருளில் கூட உபயோகித்த சில வண்ணங்கள் உள்ளனவாம். இன்றும் சில முக்கிய தினங்களில் படைகள் அணிவகுத்து மன்னருக்கோ, குடியாட்சித் தலைவருக்கோ மரியாதை செலுத்தும் அணிவகுப்பை "வண்ணங்கள் அளித்தல்" என்று கூறுகின்றனர்.

தமிழில் "பச்சைப் பொய்" என்பதை ஆங்கிலத்தில் "வெள்ளைப் புளுகு" என்கிறார்கள். மேல்நாட்டினர் பேய், பிசாசு இவைகளைக் குறிப்பிட "வெள்ளை மாது" என்கிறார்கள். அதற்குப் பல புராணக் கதைகளும் கூறுகின்றனர். ஆனால் இதற்கும் நம் நாட்டில் கணவனை இழந்தவள் வெள்ளைச் சேலை கட்டுவதற்கும் சம்பந்தமில்லை! பொதுக் காரியங்களில் ஏற்பட்ட தவறுகளை மூடி மறைத்துவிட்டால் "வெள்ளை அடித்து" விட்டார்கள் என்றழைக்கிறோம்.

வண்ணங்கள் நம் கண்களுக்கு விருந்து. அவற்றால் வழங்கும் வார்த்தைகள் சில மொழிகளுக்கு விருந்து.

✽

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

அழகுப் போட்டிக்குக்கூட, அரசு, ஆதரவு காட்டியதுண்டு!!

ஒரு நரிக்கு, வால் அறுந்து விட்டதாம்—ஐயோ, பிற நரிகள் பார்த்தால் கேலி செய்யுமே என எண்ணிற்றும்-உடனே வாலுள்ள எந்த மிருகத்தைப் பார்த்தாலும் கேலி செய்ததாம்--தன்னைப்போல் வாலையறுத்துக் கொள்ளும்படி சொல்லிற்றும். அதுபோல, அமைச்சர் சுப்பிரமணியம், தங்களிடம் இல்லாததை மறைக்க, அலங்காரமாகப் பேசுவதையே கண்டிக்கிறார்.

அடுக்குச் சொல்லும், அழகுப் பேச்சும் — மொழியின் இருவிழிகளாகும்!! தமிழ்மொழியில் என்று மட்டுமல்ல, எம்மொழியிலும், இவைதான் அழகைத் தருவன. அவர், படித்திருக்கலாம், சிறு வயதில்:

Twinkle Twinkle little star
How wonder what yur are?

என்பன போன்ற வரிகளை! இதில் சொல் அடுக்கப்பட்டுத்தானிருக்கிறது? 'விஷயம்' இல்லாமலா இருக்கிறது!! ஆங்கிலத்தைவிட, அடுக்குச் சொல்லின் அழகினை அதிகம் பெற்றது, தமிழ்மொழியேயாகும். கவிதையில் மட்டுமல்ல உரைநடையிலும், அடுக்குச்சொல்லுக்கு ஒருஉன்னத இடம் உண்டு! ஓய்வு கிடைக்கும்போது, கல்வி யமைச்சர், யாராவது ஒரு தமிழ்ப் புலவரிடம் பாடம் கேட்கவேண்டும் — அதைவிடுத்து, இப்படிப் பேசுவது அவருக்கல்ல, அவரை அமைச்சராகப் பெற்றிருக்கும் மாநிலத்துக்கே இழுக்கு.

★

---

"எஃகு தயாரிக்க வேண்டுமென்றால், நமக்கு பிலாய், துர்க்காபூர், ரூர்கலா போன்ற பெரிய பெரிய இடங்கள் தேவைப்படுகின்றன. சீனாவில், குடிசைத் தொழில்களில் ஒன்றாகவே, எஃகு தயாரிக்கப்பட்டு வருகிறது" என்று டில்லி தொழில் மந்திரி லால்பகதூர் சாஸ்திரியார் மிகவும் வேதனையுடன் வெளியிடுகிறார்! அப்படியெல்லாம் செய்வதை, வேண்டாமென்று கூறவில்லை. பம்பாய் அருகேயுள்ள பிம்பிலியில் நிறுவப்பட்டுள்ள பெனிசிலின் தொழிற்சாலையில் இந்த ஆண்டு மட்டும் நிகரலாபம் 30-இலட்சம் என்று டில்லி சர்க்கார் தெரிவிக்கிறது. சர்க்காரே ஏற்று நடத்தும் நிறுவனம், இது. தடுப்பவர்கள் யார்!!




சிறு நாடு! எனினும் சுதந்திரம் பெற்ற நாடு!!

அந்நாட்டின் பிரதமர் இந்தக் கிழமை, இந்த உபகண்டத்துக்கு வருகை தந்திருக்கிறார். அரசினர் தமது விருந்தாளியாகப் பெற்று மகிழ்கின்றனர். நேரு அவரைப் பெருமிதமாக வரவேற்கிறார். நேருவைப் போல அவரும் சுதந்திரத்துக்காகப் போராடியவர்! போராடியதோடன்றி, சுதந்திரமும் தந்நாட்டுக்குப் பெற்றவர்!

சுதந்திரப்பேறு சாமான்யமானதா—எனவேதான், அவரை ஆபிரிக்காவிலுள்ள 25 சுறு சிறு நாடுகளும் தங்களது வழிகாட்டியாகக்கொண்டுள்ளன. சில திங்களுக்கு முன்பு, அந்த நாட்டுப் பிரதிநிதிகளையெல்லாம் ஒன்று திரட்டி, "ஆபிரிக்காவிலிருந்தே அந்நிய ஆதிக்கத்தை விரட்டவேண்டும்" என்று அவரால் முழக்கமிடவும் முடிந்தது.

ஏனெனில் இப்போது அவரது பூமி, ஒரு சுதந்திர நாடு! சுதந்திர நாட்டின் பிரதமர் என்பதால் இன்று உலகம் அவரின் நடவடிக்கைகளையும் ஊர்ந்து கவனிக்க ஆரம்பித்திருக்கிறது — சமீப ஆண்டுகளில் முளைத்த நாசரைப் போல, இவரும் கருதப்படுகிறார்.

அவருடைய மண், பழமை வாய்ந்தது! பழைமையான பெயரும் கொண்டது! ஆனால் 15-ம் நூற்றாண்டில் வியாபாரிகளாக நுழைந்த போர்த்துகீசியர்கள் அந்த மண்ணில் கிடைக்கும் அற்புதப் பொருளைக் கொண்டு அதற்கு "கோல்டுகோஸ்டு" (தங்கம் படர்ந்த கடலருகேயுள்ள பூமி) என்று பெயரிட்டனர். இந்தப் பெயர்தான் நீடித்ததே ஒழிய, தங்கம் நிரம்பிய மண், விரைவில் தரித்திர பூமியாயிற்று! ஐரோப்பியர்கள் எல்லாம் அங்கே நுழைந்து, கொட்டமடிக்கலாயினர்! 500 மைல் நீளமுள்ள அந்த மண்ணின் கடற்கரையில், இன்றும் காணலாம், இடிந்து போன டச்சுக்காரர்களின் கோட்டைகளையும், ஸ்வீடிஷ் பிரிட்டானியர் போன்றோரின் மாடமாளிகையின் பிம்பங்களையும்! இவர்களெல்லாம் அங்கு நுழைந்து தங்கத்தைவிட மதிப்புள்ள, மனிதர்களைப் பிடித்து 'அடிமைகளாக' விற்றுப் பணம் சம்பாதித்தனர். 1844-மார்ச்சு இந்த மண், இராணி விக்டோரியாவின் ஆட்சியை ஏற்றது. அதே தேதியில் 113-ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த மண் இழந்த உரிமையைப் பெற்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பெற்றிருந்த "**கனா**" எனும் பெயரையும், திரும்ப வைத்துக் கொண்டது. இன்று உலகிலுள்ள சுதந்திர நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது! தன்னைப்போல் அந்நியர் பிடியில் கிடக்கும் ஏனைய இடங்களையும் சுதந்திர மண்ணாக்கவேண்டுமெனும் ஆர்வத்தையும் தூண்டுகிறது!!

அங்கு விடுதலை எழுச்சி இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர், கொழுந்துவிட்டெரியக் காரணம், இன்று பிரதமராகி இங்கு வருகை தந்திருக்கும் டாக்டர் **நிக்ருமா**வாகும். விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டோருக்கு வழங்கப்படும் 'பரிசு'கள், அவருக்கும் கிடைத்தன! அரசினை எதிர்த்தார் என்று 1850-ல் சிறைக்குள் பூட்டப்பட்டார்! ஆனால் மறு ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவரது கட்சி 38-க்கு 34-இடங்களைப்பெறவே, விடுவிக்கப்பட்டார். இப்போதும் 104-க்கு 78-இடங்கள் அந்தக் கட்சிதான் பெற்று ஆட்சி புரிகிறது.

1957ல் கனாவுக்குக்கிடைத்த சுதந்திரம் குறிப்பிடக்கூடியதாகும். அதைவிட அன்று, நிக்ருமா பேசிய "இழந்ததைப் பெற்றோம்! எங்கள் அரசைப் பெற்றோம்! நாங்களாகவே வாழ்வோம்!" என்கிற பேச்சு குறிப்பிடக்கூடியதாகும். அது முதல், ஆபிரிக்கக்கண்டத்திலுள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் புது ஒளியாகக் கனா, விளங்கி வருகிறது.

கனாவுக்கும், இந்த உபகண்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 400-க்கு மேற்பட்ட இந்தஉபகண்டத்து மக்கள் அங்கே வாழ்கிறார்கள்.

இங்கே வருகை தந்துள்ள இவ்விடுதலை வீரனை, நாம் அறிவோம்! நம்மை அவர் அறியும் வாய்ப்பில்லை. அந்த வாய்ப்பு ஏற்பட்டு, நாமும் அவரும் கை குலுக்கும் நாள், விரைவில் வருமாக. சுதந்திரம் பெற்ற திராவிடத்தின் குடிமகனைக் குலவும் நாள் விரையுமாக.

★

# படமெடுத்துக் காட்டி....!

"படமெடுத்துக் காட்டி உங்களைப் பழிவாங்குவேன், உங்கள் மானத்தைக் கப்பலேற்றுவேன்."

—என்று பயமுறுத்தினான் அவன்!

எந்த நாடகத்திலே வருகிற கட்டம் இது, ஏனிந்த 'வில்லன்' இங்ஙனம் கர்ச்சிக்கிறான்! அவனிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிற அந்தப் பரிதாபத்துக்குரியவன் யார்? அவன், செய்த குற்றமென்ன, கொலைபாதகம் புரிந்தானா, கொள்ளையடித்திடத் துணிந்தானா? என்று இன்னோரன்ன கேள்விகளை எழுப்பிடத் தோன்றும் இந்த வாசகங்களைப் படிக்கிற எவருக்கும்.

ஆனால் நாடகத்திலே வருகிற வில்லனல்ல, இவ்வாறு கர்ச்சிப்பது—ஒரு நாட்டின் பொறுப்பான பதவியிலே இருப்பவர்! — தென்னாப்பிரிக்காவின் வெளிவிவகார இலாகாவின் தலைவர்!—எரிக் லோவ் என்பார்.

தென்னாபிரிக்கா என்றாலே நிற வெறியின் பிறப்பிடம், இருப்பிடம் என்பதனை உலகறியும்.

வெள்ளையரல்லாத ஏனையோருக்கும்--நீக்ரோவர்களுக்கும் அங்கே சென்று குடியேறியிருக்கிற இந்தியத் துணைக்கண்டத்தினருக்கும் — இழைக்கப்படுகிற அநீதிகள் அனந்தம்!

இவர்களுக்கு வாக்குரிமை தரப்படவில்லை என்பது மட்டுமல்ல — நாலாந்தர மக்களாக, வெள்ளையர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்க வேண்டியவர்களாக, ஏறக்குறைய அடிமைகளாக, நடத்தப்படுகின்றனர் இவர்கள்!

இந்த அவல நிலையினைப் போக்கிட நடத்தப்பெற்ற போராட்டங்கள் அநேகம்.

அமைதியான முறையிலே காந்தியார் நடத்திய போராட்டம், வெள்ளையம்மாள் என்ற ஒரு தமிழ் மாதைப் பலி கொடுத்தது!

அந்த மாதரசியின் வீர உணர்ச்சியையும் தியாகப் பண்பினையும் பாராட்டிக் காந்தியாரே கூட எழுதியிருக்கிறார்.

ஆயுதந்தாங்கிய போராட்டங்களும் நடைபெற்றன ஆங்காங்கே. அதன் பயனாகவே உயிர் நீத்தோர் பலர்! கைகால்கள் கண்கள் போய் அங்கம் குறைந்தவர்களாக ஆக்கப்பட்டோர், பலர்! சிறைக்கோட்டம் எய்தி வதைபடுகின்றோர் எண்ணிறந்தோர்.

இந்த இனவெறக்கு எதிராக உலகத்தின் நாடுகள் பல கிளம்பின.

"இருபதாம் நூற்றாண்டிலா, அணுகுண்டு சகாப்தத்திலா,

M. S. வெங்கடாசலம், M. A.,

வானத்தை எட்டிப்பிடிக்க மனிதன் முயன்று, அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்று வருகிற இந்த நாகரிக காலத்திலுமா நிறத்தாலே பேதம்?" என்ற கேள்வி எழுப்பப்பட்டது, உலகப் பேரவையான ஐக்கிய நாடுகள் அமைப்பில்.

மனிதப்பண்பிற்கு முரணான இத்தகு இழிநிலைக்கு எதிராக உலகின் பெரும்பகுதி எழுந்தும், கண்டனக்குரல் எழுப்பியும் தென் ஆப்பிரிக்க அரசு நீதிக்கும் மனித உணர்வுக்கும் கட்டுப்படுவதாக இல்லை!

"அது எங்கள் உள்நாட்டு விஷயம். நீங்கள் யார் அதிலே தலையிட?" என்ற கேள்வியை எழுபபி, அந்தப் பிரச்சனை பற்றிப் பேசியோருக்கு வாய்ப்பூட்டுப் போட முயன்று வருகிறது இன்று வரை!

மூன்றாண்டுகளுக்கு முன்னாலே உலக அமைப்பில், தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி மிகத்திமிரோடு பதில் அளித்தார்.

"வெள்ளையர்கள், கறுப்பர்களை அண்ணன் தம்பிகளாக ஏற்பது இருக்கட்டும், அவர்களை அத்தான்களாக்கிக் கொள்ளுங்களேன்".

இத்தகைய பதிலளித்த ஹாலோவே என்பார், பலராலே கண்டிக்கப்பட்டார் — ஆனாலும் சிலர் அவன் சொல்லுவதிலும் நியாயம் இருக்கிறது, வெள்ளையர்களுக்கும் மற்றோருக்குமிடையே பேதம் நீங்கத்தக்க முயற்சியிலே உலகம் இன்னமும் இறங்கிடாதது இந்த நாகரிகயுகத்தில், மறைக்கப்பட முடியாத குறைதானே, குற்றம்தானே என்றனர்!

இன்று தென்னாபிரிக்கா பிரச்சினை பற்றிய வாதப் பிரதிவாதங்களிலே, முன்பிருந்ததைவிடக் கொஞ்சம் சூடு பிடித்திருக்கிறது, தென்னாபிரிக்க இந்தியர்கள், தாங்கள் குடியிருக்கும் பகுதிகளைவிட்டு வேறு இடங்களுக்கு அப்புறப் படுத்தப்படுவதற்கான முயற்சிகள் அந்த அரசாங்கத்தால் எடுக்கப்படுவது குறித்து!

இந்த நடவடிக்கை குடியிருப்பு நிலச் சட்டம் என்ற புதிதாக, அங்கே இயற்றப்பட்டிருக்கிற சட்டத்தின் மூலம், எடுக்கப்படுகிறது.

இது தகாத போக்கு, நியாயத்தின்பாற்பட்டதன்று. இடம்விட்டு இடம் மாற்றுவதன்மூலம், குடியிருப்பு இடங்களைச் சுற்றியிருந்த நிலங்களின் மதிப்புக் குறைகிறது, இதனாலே இந்தத்துணைக்கண்டத்திலிருந்து அங்கு சென்றிருப்போர் நிலைவெகுவாகப்பாதிக்கப்படுகிறது என்று கண்டனக்குரல், காரண

காரிய விளக்கங்களோடு, எழுப்பப் படுகிறது பலரால்—அவர்களிலே ஒருவர் இப்போது இந்தத் துணைக் கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் பாதர் என்பார்; நேடால் இந்தியர் சங்கத்தின் தலைவர்!

ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நிலை இரங்கற்குரியது என்று உலகெங்கணும் செய்திடப்படும் பிரசாரத்தை முறியடிப்பதற்காகத்தான், "படமெடுத்துக் காட்டும்" போராட்டத்தில் இறங்கிடப் போவதாகக் கூறுகிறார் எரிக்லோவ்!

"எங்கள் நாட்டில் மட்டும்தான் குடிசைகள் இருக்கின்றன-குடிசை வாழ் மக்கள் அவதிக்கு ஆளாகிறார்கள் — ஆளாக்கப்படுகிறார்கள் என்பதல்ல! இந்த நிலை உலகத்தின் நாடுகள் பலவற்றில் இருக்கிறது என்பதனை உலகறியச் செய்திடும் பொருட்டு, அந்தந்த நாட்டின் நிலையினைப் படமெடுத்து, உலக அவையில் திரையிட்டுக் காட்டுகிறேன்" என்பது, தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தின் சார்பில் பேசுகிற எரிக்லோவ் என்பார் செப்புகிற வாதம் — செய்கின்ற முழக்கத்தின் சாரம்!

நாடகத்திலே வருகிற 'வில்லன்' கதாநாயகனையோ வேறொருவனையோ பார்த்து "உன் மானத்தைக் கப்பலேற்றுவேன்" என்று சொல்லுகிற கட்டத்தில், நாடகம் பார்க்கின்ற அனைவருக்கும் அந்த 'வில்லன்' மீது ஓரளவு அருவருப்புத் தோன்றுவது இயல்பு— அந்த நிலைக்கு ஆளாகியிருப்பவர் எரிக் லோவ்!

ஆனால் நாடகம் பார்த்திடுவோரின் உணர்வும் கருத்தும் அதோடு நின்றிடாது — வில்லனால் அச்சுறுத்தப்பட்டு அவதிப்படுபவன் மீது ஒரு பக்கம் பரிதாபம் ஏற்படும் — மற்றோர் பக்கம், இவன் என்ன தவறு செய்திருப்பான், குற்றமற்றவனால் அந்தக் கயவனது உளறலைக் கண்டு அஞ்சி நடுங்குவானேன், என்றும் எண்ணிடத் தோன்றும்!

அத்தகைய 'பரிதாபத்துக்கும்' 'சந்தேகத்துக்கும்' உரிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன சில நாடுகள் — அவற்றிலொன்று இந்தத் துணைக் கண்டம்!

படமெடுத்துக் காட்டுவேன் என்று அவர் பகன்றவுடன், ஆகா செய்துகொள், அதனாலென்ன, எங்கள் நாட்டில் ஏழையர் இல்லை, குடிசைகளில் நலிவோர், குப்பி கழுவிட வழியற்றோர், இத்தகையோர் தேடிப்பிடித்தாலும் கிடைத்திட மாட்டார்கள், என்று சவால் விட முடியும்?

"உண்மைதான்... ஆனால்...!" என்று இழுத்தபடி எழுதிக்காட்டுகிறது "இந்து" இதழ்!

உண்மை, மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை. அதுவும் பயங்கரமான உண்மை என்று கூறிடத் தோன்றுகிறது.

குடிசை வாழ்வோர் தொகை இந்த நாட்டில் ஏராளம். அவர்கள் நிலை பரிதாபத்துக்குரியது, பகர வொண்ணாதது, என்பது மட்டுமல்ல; தென்னாப்பிரிக்காவில் நடைபெறுவதைப்போல், குடிசைவாழ்வோர் வேற்றிடத்திற்கு, அவர்களின் எதிர்ப்பினையும் பொருட்படுத்திடாமல், வெளியேற்றப்படுகின்ற செயல், இங்கும் நடைபெறுவதனைக் காண்கிறோம் — நகர்களிலும் நாட்டுப்புறங்களிலும்!

சுகாதார அபிவிருத்திக்காக என்று காரணம் காட்டிச் செய்யப்படுகிற இந்தச் செயல், கட்சிக் கண்ணோட்டத்தோடும், தங்களுக்கு ஒட்டுப்போடாத பகுதியினரை ஆட்சியாளர் பழிவாங்கும் நோக்கத்தோடும் பற்பல இடங்களில் செய்யப்படுகின்றன என்பதனை அனைவரும் அறிவர்!

குடிசை வாழ்வோர் இந்த ஆட்சியாளரிடம் நன்மைகள் பெற முடியவில்லை என்பதோடு மட்டுமிருந்தால் சகித்துக்கொள்ளலாம்!

மாறாக அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் கரத்தில் பட்டுவரும் இன்னல்களை எண்ணிப் பார்ப்போர் எவருக்கும், எரிக்லோவ் சவால்விடுமளவுக்குத் துணிந்ததன் காரணம் நன்கு புரிந்திடும்!

காற்றுப் புகமுடியாத குடிசைகளில் சேறும் சகதியுமான சுற்றுப்புறத்தில் பசியென்று அழுவிடும் பிள்ளைகள் பலர் படைத்திட, பச்சிளங் குழந்தைக்குத் தந்திடப் பாலில்லையே என்று தாய் வருந்திக் கண்ணீர் விட, நாளெல்லாம் செய்வேன நாள் முழுவதும்தான் உழைக்கிறேன், ஆனாலும் நான் பெற்ற செல்வங்களின் பசியைப் போக்கிடக்கூடக் கஞ்சி இல்லை என்று குடும்பத் தலைவன் பதறுகிற பரிதாப நிலையினைப் பார்க்கிறோம்-பற்பல இடங்களில் என்பதுகூடத் தவறு, நாட்டின் பெரும் பகுதியில்!

இதைவிட மோசமான நிலை, கல்மனத்தையும் கரையவைத்திடும் நிலை, இங்கு நடப்பதும் ஆட்சியா? ஏழையரின் அவலம் போக்கிட எத்தனிக்காதோரா ஆட்சியாளர்கள் தாமா? என்று ஆத்திரமும், அளவுகடந்த வெட்கமும் கலந்த நிலையில் கேட்டிடத் தோன்றுகிறது. அளவுக்குமேல் மோசமான நிலை இங்கே இருந்திடுகின்றது.

குடிசையுமற்று, வானமே கூரையாய், வெண்மதியே விடிவிளக்காய், கட்டாந்தரையே பஞ்சு மெத்தையாய், கருங்கல்லே தலையணையாய்ப் படுத்துறங்கும் பரிதாபத்துக்குரியோர், பல இலட்சக் கணக்கானோர்.

**சென்னை நகரிலே மட்டும் குடிசை கூட இல்லாத குடும்பங்கள் 65,000-க்கு மேற்பட்டனவாம். பிளாட்பாரத்திலும், சைகிள் ரிக்ஷாவிலும், மற்றும் கிடைத்த இடங்களிலும் படுத்துறங்குவோர் தொகை ஏறக்குறைய 3-இலட்சங்களாம்.**

சென்னை நகரத்தின் மொத்த மக்கள் தொகை ஏறக்குறைய 18-இலட்சம். இதிலே வீடற்று, வீதியிலே 'குடும்பம்' நடாத்துவோர் 3-இலட்சம் — ஆறில் ஒரு பங்கு!

வெட்கம் பிய்த்துத் தின்ன வேண்டாமா, நாள்தோறும் விழாக்களிலும் விருந்து வைபவங்களிலும் கலந்துகொண்டு பவனி வருகிற ஆட்சியாளர்களுக்கு!

பாவம், என்ன பதிலளிப்பார்கள் "படமெடுத்துக்காட்டி உங்கள் மானத்தைக் கப்பலேற்றுகிறேன்" என்று லோவ் புரிந்திடுகிற அர்ச்சனைக்கு?